பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 21 06-09-94 செவ்வாய்க்கிழமை ஓசை 200

## யாழ். மாவட்ட ஆசிரியர் தொகை படிப்படியாக வீழ்ச்சி

யாழ் மாவட்டத்தில் ஆசிரியர் தொகை படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருவதாகவும் இதனை உடன் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறும்இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் த. மகாசிவம் கல்வி அமைச்சின் செயலாளரையும், கல்விச் சேவைச் சபைச் செயலாளரையும் கோரியுள்ளார். யாழ் மாவட்டத்தில் ஆங்கில ஆசிரியர்களுக்கு அறுபத்தி ஏழு சதவீத பற்றாக்குறையும், ஆரம்ப ஆசிரியர்களுக்கு நாற்பத்தெட்டு சதவீத பற்றாக்குறையும், விஞ்ஞான-

[6 ஆம் பக்கம் பார்க்க]

# சந்திரிகா அரசாங்கத்துடன் தொண்டா இணைய முயற்சி!

## பேச்சுவார்த்தை நடப்பதாக அறிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் இணைவதற்கான முயற்சியில் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளது. இது குறித்து விரைவில் முடிவு எடுக்கப்படும் என திரு. தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மேலும் தொண்டமான் தெரிவிக்கையில்:

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றது. பேச்சுவார்த்தையின் முடிவு குறித்து இ. தொ. காவின் முக்கிய சபைகளுக்கு அறிவிக்கப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குடியிருப்புக்கள் மீது பீரங்கித் தாக்குதல்

### வீடு ஒன்றும் பலத்த சேதம்

(வடமராட்சி)

பருத்தித்துறை கடற்பகுதியில் ரோந்து சென்ற கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி வீடொன்று சேதமடைந்தது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 7 45 மணியளவில் நடைபெற்றது. கடற்

(6 ஆம் பக்கம் பார்க்க

## விமானக் குண்டு வீச்சு பீரங்கிதாக்குதல் நிறுத்தம்

### இராணுவத் தளபதி அறிவிப்பு

(கொழுப்பு)

வடபகுதியில் விமானக் குண்டு வீச்சு மற்றும் பீரங்கி தாக்குதல்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா தெரிவித்துள்ளார். கொழும்பில் செய்தியாளர்களிடையே அவர் இத் தகவலை வெளியிட்டார்.

## இருட்டில் மறைந்திருந்து வழிப்போக்கர்மீது வெட்டு

(குருநகர்)

இருட்டில் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் வழிப்போக்கர் ஒருவர் பலத்த வெட்டுக்காயங்களுக்கு உள்ளான சம்பவம் ஒன்று நவாலி சின்னப்பா வீதியில் நடந்துள்ளது.

கடந்த சனி இரவு நடைபெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது.

நவாலியைச் சேர்ந்த செல்லையா அரியதுரை (வயது 30) என்பவர் இரவு 9 மணியளவில் மேற்குறிப்பிட்ட வீதியால் வீடுநோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது இருட்டில் மறைந்திருந்த ஒருவர் தாக்கியுள்ளார்.

இதனால் இவரது முகத்திலும் கழுத்திலும் பாரிய வெட்டுக்காயங்கள் ஏற்பட்டுள்ளன. இவர் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(21)

## மீன்கறி இல்லாததால் வீட்டுக்கு தீ வைப்பு

(தென்மராட்சி)

மனைவி மீன்கறி சமைத்து சமைக்கவில்லை என்று கேட்டதாகவும் பின்னர் கோப

## அரசியல் யாப்பு மாற்றம் நேற்று முதற்கூட்டம்

(கொழும்பு)

அரசியல் யாப்பில் மாற்றம் கொண்டுவருவது சம்பந்தமான முதல் கூட்டம் பாராளுமன்றத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்றது. பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் சகல அரசியற் கட்சிகளினதும் தலைவர்களும் இதில் கலந்துகொண்டனர்.

சபாநாயகர் கே பி. ரட்னாயக்கா கூட்டத்திற்கு தலைமைதாங்கினார்.

அரசியல் யாப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் சமர்ப்பித்த யோசனைகளை ஆராய்ந்த பின்னர் ஒரு சில தினங்களில் கூட்டம் மீண்டும் கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதி டி. பிக்கு கடும் சுகவீனம்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி விஜேதுங்காவிற்கு ஏற்பட்ட கடும் சுகவீனம் காரணமாக நேற்று அவர் கொழும்பு தனியார் மருத்துவ மனையொன்றில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

தீவிர சிகிச்சைப் பிரிவில் இவர் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் நெருங்கிய உறவினரைத் தவிர ஏனையோர் இவரைச் சந்திப்பதற்கோ அன்றி பார்வையிடுவதற்கோ அனுமதிக்கப்படவில்லைஎனமேலும் தெரிவிக்கப்படுகிறது (6-ம் ப, பார்க்க)

## வட - கிழக்கு ஆளுநராக

## பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு திருச்சபை உதவி செய்யமுடியும்

### யாழ் மறைமாவட்ட குருமுதல்வர்

(லண்டன்)

பேச்சு வார்த்தைகளில் தலைவர்கள் நேரடியாக பங்குபற்ற முடியாது. அதற்கு ஆயத்தமாக கீழ்மட்டத்தில் அரச பிரதிநிதிகள் அனுப்பப்பட்டு அதற்கு ஆயத்தம் செய்ய வேண்டும். இதற்கு திருச்சபையும் சில உதவிகளை செய்யலாம். இவ்வாறு யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் வண. எஸ் ஜே இமானுவல் அடிகளார் பி பி ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இத்தேர்தல் முடிவுகளை நாம் வரவேற்கிறோம். ஏனெனில் ஐ தே. க ஆரசு இங்கு பிரச்சினை இல்லை. பயங்கரவாத பிரச்சினை தான் உள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசும் படைகளும்

(தென்மராட்சி)

மனைவி மீன்கறி சமைத்து தராததையிட்டு கோபப்பட்ட கணவன் தனது வீட்டை எரித்த சம்பவம் ஒன்று குடமாவெளி மந்துவில் பகுதியில் இடம்பெற்றது.

வேலையால் வீடுவந்தஇவர் தனது மனைவியை ஏன் மீன் சமைக்கவில்லை என்று கேட்டதாகவும் பின்னர் கோபமுற்ற அவர் வீட்டுக்கு தீ வைத்ததில் வீடு முற்றாக தீப்பற்றி எரிந்தது இதனால் தளபாடங்கள் உட்பட பலத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது பின்னர் இவர் வீட்டினை திருத்தி வருகின்றார். (86)

## ஜேர்மன் கார்விபத்தில் சகோதரிகள் கருகி மரணம்

மீசாலை வடக்கைச்சேர்ந்த இரு சகோதரிகள் ஜேர்மனியில் கார் விபத்தில் பலியானார்கள்.

மீசாலை வடக்கைச் சேர்ந்த எஸ். அனுலா (26வயது) எஸ் நகுலா (24 வயது) இருவரும் ஜேர்மனியில் காரில் சென்று கொண்டு இருந்த வேளை இவர்கள் சென்ற காருடன் வேறொரு கார் மோதுண்டதால் அக்காரின் பெற்றோல் கொள்கலன்வெடித்து எரிந்தது இதன் சாரதி தப்பி விட்டார் மேற்படி இரு சகோதரிகளும் எரிந்து மரணமானதாக தெரியவருகிறது இவர்கள் இருவரும் திருமணமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (86)

## வண்டிலுக்குக் கீழே புகுந்த மோட்டார் சைக்கிள்

(தென்மராட்சி)

இருட்டில் வந்த மோட்டார் சைக்கிளும் வண்டிலும் மோதிக்கொண்டதில் சாரதி படுகாயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனி இரவு 7 மணியளவில் சரசாலைப் பகுதியில் நடந்த இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது: எதிர் எதிரே வந்த வண்டிலும் மோட்டார் சைக்கிளும் இருட்டில் அடையாளம் காணமுடியாத நிலையில் விபத்திற்குள்ளாகின. அவ்வேளைவண்டிக்குக் கீழாக மோட்டார் சைக்கிள் வேகமாக புகுந்துகொண்டதாகவும் மோட்டார் சைக்கிள் சாரதியான பெருங்குளத்தைச் சேர்ந்த க. குகதாசன் (34) பலத்த காயங்களுக்கு உள்ளானதாகவும் தெரிய வந்துள்ளது. (86)

## ஜனாதிபதி ஆட்சி முறைமையை தேர்தலுக்குமுன் நீக்கினால் ஆதரவு

### ஐ. தே. க. பொதுச் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டுவந்தால் மட்டுமே அதனை ஆதரித்து தமது கட்சி வாக்களிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் இச்சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தால் தமது கட்சி எதிர்க்கும் என்றும் எனவே உடனடியாக இப் பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டுவருவதன் மூலம் இவ் அரசியல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வட - கிழக்கு ஆளுநராக தங்கத்துரை நியமனம்?

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு ஆளுநராக தங்கத்துரை நியமிக்கப்படலாம் என கொழும்பிலிருந்து வரும் தகவல் தெரிவிக்கின்றது.

முன்னர் ஐ தே க ஆட்சிக் காலத்தில் வடக்கு கிழக்கு ஆளுநராக இருந்த லயனல் பெர்னாண்டோ புதிய அரசு பதவி ஏற்றதும் அப்பதவியிலிருந்து தகவல்துறை அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டதை அடுத்துஅவ்விடத்திற்கு தமிழர் ஒருவரைநியமிப்பதற்கு புதிய அரசு எடுத்த முடிவை அடுத்து அவ்விடத்திற்கு தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரும் திருகோண

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு முகாமூடாக சோதனையுடன் அனுமதி

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் பாப்பரசர் காலிமுகத்திடலில் நடத்தும் புனித ஆராதனையில் கலந்துகொள்ள ஆனையிறவு தடை முகாம் ஊடாகச் செல்ல சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கை வானொலி அறிவித்துள்ளது.

ஜனவரி 21ஆம் திகதிகொழும்பு காலிமுகத்திடலில் நடைபெறும் பாப்பரசரின் ஆராதனை நிகழ்ச்சிக்காக கொழும்பிற்கு ஆனையிறவு ஊடாக செல்லலாம் எனவும் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் மக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கு விரைவில் மின்சாரம் கிடைக்கும்

### பாதுகாப்பு பிரதி அமைச்சர் தெரிவிப்பு

[கொழும்பு]

வடபகுதிக்கு இயன்றளவு விரைவில் மின்சார வசதி அளிக்கப்படும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த கூறியுள்ளார்-

மட்டக்களப்பு பகுதியிலுள்ள தாராவி இராணுவ முகாமில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், ரூபவாகினித்

[6ஆம் பக்கம் பார்க்க]

## இன்று படகுச்சேவை

கிராலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## அரசும் படைகளும் ஒத்துழைத்தால் பிரச்சினையை விரைவில் தீர்க்கலாம்

### பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

அரசாங்கமும் படையினரும் ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலமே நீண்டகாலமாகத் தொடரும் வடக்கு - கிழக்கு பிரச்சினையை இன்னும் நீண்ட காலத்திற்கு நீடிக்க விடாது முடிவுக்குக் கொண்டு வர முடியும் என சிறிலங்கா பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

வடபகுதி முகாம்களுக்கான தனது விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்றையதினம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முகாம்களுக்கு விஜயம் செய்த அமைச்சர் அங்கு படையினர் மத்தியில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மூன்றாவது படையணியின் தலைமையக

[6 ஆம் பக்கம் பார்க்க]

## லூசியன் மாநகர மேயர் இன்று யாழ். வருகை

லண்டன் லூசியன் மாநகர மேயர் சின்னமணி இன்று யாழ்ப்பாணம் வருகிறார்;

லண்டனிலிருந்து கடந்த வாரம் கொழும்பு வந்த இவர் இன்று காலை விமானம் மூலம் பலாலி வந்தடைவார் பின்பு அங்கிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறையை வந்தடைவார் எனவும் தெரிய வந்துள்ளது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தொழிலாளர் ஊர்வலம் மீது பொலிசார் தாக்குதல்

### 50க்கு மேற்பட்டோர் காயம்

(கொழும்பு)

பியகம சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் நடத்திய அமைதி ஊர்வலம் மீது பொலிசார்கண்ணீர்ப்புகை குண்டு வீசி தாக்கியதுடன் ரப்பர் குண்டு தாக்குதலையும் நடத்தியுள்ளனர் இதனால் 50க்கு மேற்பட்டோர் காயமடைந்து மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் கடமைபுரியும் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட ஊழியர்கள் தமக்கு ஐம்பது சதவீத சம்பள உயர்வு, மற்றும் தொழிற்சங்க உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்து கிரிபத்கொட சந்தியில் இருந்து நாரகேன்பிட்டி தொழிலமைச்சு காரியாலயம் வரை பாதயாத்திரை மேற்கொள்ள முற்பட்டனர்-

இப்பாத யாத்திரை தலை

(6ஆம் பக்கம் பார்க்க)

## அடையாளம் காட்டி பெறவும்

சிறுவர்களின் மூன்றுமோதிரங்களும் சிறிய கைக்கடிகாரம் ஒன்றும் கேணல் கிட்டு சிறுவர் பூங்காவில் பூங்கா நிர்வாகத்தினரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது- உரியவர்கள் அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளவும்-

## ஊர்வலத்தின்பின்னணி; எதிர்க்கட்சி அரசியல்வாதி

### அமைச்சர் மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு

(கொழும்பு)

ஊழியர்கள் தமது பிரச்சினையைத் தன்னிடம்தெரிவித்தால் தான் அவர்களிடம் நேரில் சென்று பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாகவும் அவர்கள் பாதயாத்திரை செய்திருக்கவோ அன்றி இச்சம்பவம் நடை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### வைத்திய சேவை

வயிற்றுப்புண், இருதய சுவாச வியாதிகள், வாதம், வலிப்பு மாதவிடாய் கோளாறுகள், மகப்பேறின்மை, மூலமூத்திர, தோல் வியாதிகள், Digital Electronic பரிசோதனைகளும் சிறந்த சிகிச்சையும் என பெயர் பெற்றது. இரெட்ணம் வைத்தியசாலை 129. ஸ்ரேஷன் றோட், யாழ்ப்பாணம். (9233)

### வெளிவந்துவிட்டது வியாழன் மாற்றம்

Prof.T.சத்தியதாஸன் கணிப்பில், ஏக விநியோகஸ்தர்கள் ஸ்ரீ காந் புத்தகசாலை நல்லூர். மக்மிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம். இந்தியா ருடே 1994 ஆண்டு மலர் வெளிவந்து விட்டது. சீவம் நீதிக்கதைகள் 3,4,5,6 ஆண்டு 5 கணிதம் தமிழ் 94 வினாவிடைகள் (ஜி-10101)

### விற்பனைக்கு

சாவகச்சேரி தபால் கந்தோர் வீதி முதலாம் ஒழுங்கையில் 2½ பரப்பு வீட்டுக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு விஷ்ணு முகவர் (பழைய நீதி மன்றுமுன்னால்) கண்டி வீதி, சாவகச்சேரி. (9270)

### சேலைப்பை இனாம்

தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்படும் நல்லூர் கண்காட்சி சாலையிலுள்ள அண்ணா தொழிலக விற்பனை நிலையத்தில் அண்ணா உற்பத்திப் பொருட்களை ரூபா 300/க்கு கொள்வனவு செய்து ஒரு சேலைப் பையை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். [ஜி-10258]

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள மூன்று சில்லு சைக்கிள் (றிக்சா) விற்பனைக்கு தொடர்பு:- கிருஷ்ணா பத்திரிகை விற்பனை நிலையம் மந்திகை புலோலி. (9295)

### புரோயிலர் குஞ்சுகள் விற்பனை

PRIMA BROILER பிறிமா புரோயிலர் ஐந்துநாள்கோழிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (9296)

### மாதாந்த ஒன்று கூடல்

தீவகக்கோட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களின் மாதாந்த ஒன்றுகூடல் இன்று பிற்பகல் 3 00 மணிக்கு நாவாந்துறை கார்த்திகா பாடசாலையில் நடைபெறும். எனவே தீவகக் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து கிராமிய உற்பத்திக் குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக்கொள்கின்றது.

## குடும்பத் தகராறு கைகலப்பாகியது

குடும்பத் தகராறு பெண்ணின் மண்டையைப் பிளந்தது. சென்ற வியாழக்கிழமை (1-ம் திகதி) கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:- குடியிருப்பில் வசிக்கும் தீவகத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றின் பெண்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாகியதாகவும், இதனை அடுத்து குடும்ப ஆண்கள் சண்டையில் தலையிட்டதாகவும் அப்போது மைத்துனரான இளைஞர் ஒருவரின் தாக்குதலுக்கு இலக்காகி வசந்தா என்ற பெண்மணி மண்டை உடைந்து படுகாயம் அடைந்ததாகவும் மேலும் தெரிய வருகின்றது. ஆபத்தான நிலையில் எடுத்துச் செல்லப்பட்ட இப்பெண்மணி தற்போது யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (22)

## கோழி வளர்ப்பு கடன்

யாழ் மாவட்டத்தில் கால் நடைகளின் அபிவிருத்தியை மேம்படுத்தும் பொருட்டு வடமராட்சியில் கரணவாய் வடக்கு, கரணவாய் தெற்கு ஆகிய பகுதிகளில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கோழி வளர்ப்புக்கடன்களை வழங்கியுள்ளனர்.

அண்மையில் 2-ம் கட்டமாக 15 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இக் கடனுதவியானது ஒரு பயனாளிக்கு 10,000ரூபா வீதம் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## திருக்குறள் மனனப்போட்டி

(தொல்புரம்)

தமிழரின் வாழ்க்கை நூலாகிய திருக்குறளை சிறார்களின் மனதில் பதிக்கும் நோக்காகவும், மாணவர்களின் கல்வி அறிவினை ஊக்குவிக்கும் முகமாகவும் சிறுவர்முதல் ஆண்டு 5 வரையிலான மாணவர்களுக்கு திருக்குறள்மனனப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

இந்த மாதம் நடுப்பகுதியில் இடம்பெறவுள்ள மேற்படி மனனப் போட்டிகளில் காரைநகர் மாணவர்கள் எங்கு கல்வி பயின்றாலும் பங்குபற்றலாம் என வாரிவளவு நல்லியக்கச் சபையினர் தெரிவித்துள்ளனர். (41)

# கொழும்பு நீதிமன்றில் ஆள்மாறாட்டம் நான் அவனில்லை என்ற சந்தேகநபர்

(கொழும்பு)

கொழும்பு மேல்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் ''நயன் அவனில்லை'' எனத் தெரிவித்தார்.

6-1-1992-ல் மன்னார் நகரில் ரி-56 ரக துப்பாக்கியும் ரவைகளும் சட்ட விரோதமாக வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டு வல்படுவ சிறிபாலே கல்கடுவ பகுதியைச் சேர்ந்த 33 வயதான முன்னாள் இராணுவத்தினரான மொகமட் இக்பால் என்பவர் மீது சுமத்தப்பட்டு வழக்கு நடைபெற்றது.

கடந்த 31ம் திகதியன்று கொழும்பு மேல் நீதிமன்றில் இவ் வழக்கு விசாரணைக்கு வந்த போது 20 வயதான பாடசாலைக்கே சென்றிராத மன்னாருக்கே போயிருக்காத கொம்பனித்தெருவில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து 16.11 93 ல் கைதான மொகமட் இக்பால் என்பவர் சந்தேக நபராக ஆஜர் செய்யப்பட்டார்.

இந்தஆள் மாறாட்டம் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து முன்பு குற்றம் சாட்டப்பட்ட ஏற்கனவே பிணையில் விடுதலை பெற்று சென்றிருப்பது தெரியவந்தது இதைபடுத்து ஆஜர் செய்யப்பட்ட நபர் யாரால்? ஏன்? கைது செய்யப்பட்டார் என்ற விபரத்தை அறியத்தரும்படி நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

## ஜனாதிபதி விஜேதுங்கா பியோனாக செயற்படுகிறார்

(கொழும்பு)

பிரேமதாசாவின் அரசாங்கத்தில் பியோன் ஆக தொழிற்பட்ட டி பி விஜேதுங்கா, இன்று சந்திரிகா அமைச்சரவையிலும் அவ்வாறே செயற்படுகின்றார் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

முதலாவது அமைச்சரவைக் கூட்டம், உத்தியோகபூர்வமாக நடைபெறும் முன்பே அலரிமாளிகையில் முதலாவது கூட்டம் நடைபெற்றுவிட்டது. அங்கு எடுத்த முக்கிய தீர்மானங்களே பின்னர், ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புக்கு படிக்கப்பட்டது. இவ்வாறான ஒரு நிலைமையிலேயே, டி.பி. விஜேதுங்கா விஷயம் தெரியாதவராக பணியாற்றி வருவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அந்த முன்னாள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## விவசாய விருத்தித் திட்டம் மீண்டும் அமுல்படுத்தப்படும்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் விவசாய அபிவிருத்தி துரிதப்படுத்தப்படவுள்ளன. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வன்செயல்கள் காரணமாக இடைநிறுத்தப்பட்ட விவசாய விரிவாக்க திட்டங்களை மீண்டும் அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைமேற்கொள்ளப்படுகிறது. இதற்கென வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு ஆறுகோடி எழுபது லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், இத்திட்டம் 1986 முதல் இடைநிறுத்தப்பட்டிருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விவசாயத் திணைக்களம், கால்நடைசுகாதார திணைக்களம், தெங்கு அபிவிருத்திச் சபை என்பவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்ததாக விவசாய விரிவாக்கத் திட்டம் வகுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.


## WANTED HOUSE

Ex-Patriate requires Three bedroom house in Town. House should be in a quiet location and preferably in the Safety Area.

Please Contact:

Administrative Officer
SAVE THE CHILDREN FUND (UK)
''Karuvemban Yalavu''
Rajaveethy
Thirunelvely.

(சி.10273)



யாழ் / மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம்

வடமராட்சிக் கிளை

## அன்பான வேண்டுகோள்

எமது கிளையால் இதுவரை காலமும் மனமுவந்து அளிக்கப்பட்ட நன்கொடைகள் இன்றைய பொருளாதாரநிதி நிலைமையால் தொடர்ந்து வழங்க முடியாதுள்ளது என்பதை எமது கிளைப் பொதுச்சபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது இவ்வறித்தல் மூலம் எதிர்வரும் காலங்களில் எங்களால் எவருக்கும் நிதியுதவியோ, நன்கொடைகளோ வழங்க முடியாதுள்ளது என்பதை மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நன்றி

இங்ஙனம்
க. சிவகுருநாதன்
செயலாளர்

(9298)



## நாடக ஆர்வலர்களே!

இதோ ஒரு வித்தியாசமான படைப்பு

நல்லூர்
பொருண்மியக் கலையரங்கில்
இன்று (06 - 09 - 94)
இரவு 8 மணிக்கு
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தயாரித்து வழங்கும்
க. சிதம்பரநாதனின் நெறியாளுகையில்
''நாமிருக்கும் நாடு நமது''



யாழ். செயலகத்திற்குத் தேவையான மாக்களுபாடங்களை


## நினைவு கூருகின்றோம்...

06. 09. 1994

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் வவுனியா-புளியங்குளம் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட-

★ கரன் (- - புளியங்குளம்- வவுனியா)
★ யகிந்தா (செல்லையா சதானந்தன் முள்ளலத்தீவு)
★ விஜி (விஜியராகவன் - ஒட்டி சுட்டான்- முல்லைத்தீவு)

நமது''

நாடகம்

தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-10275)

உ

## விவாக சோபன விஞ்ஞாபனம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீ பவ ஆண்டு ஆவணி மாதம் 22-ம் நாள் (07-09-1994) புதன்கிழமை உத்தர நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய நன்நாளில் காலை 7 மணி 20 நிமிஷம் முதல் 8 மணி 25 நிமிஷம் வரையுள்ள கன்னியாலக்ன சுபமுகூர்த்தவேளையில்.

இ. தியாகராஜ குருக்களின்
சௌபாக்கியவதி

ரகுதாம்பிகையை
[தங்கப்]

ச. சபாரத்தினக் குருக்களின்
சிரேஷ்ட புத்திரன்
**சிவஸ்ரீ உருத்திரானந்தக்குருக்கள்**
(கிளி ஐயா)
சிவாச்சாரியார் மயுராபதி பத்திரகாளி
அம்மன் தேவஸ்தானம் கொழும்பு
அவர்கட்கு

கன்னியாதான திருமாங்கல்யாதாரணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று கொழும்பு மயுராபதி பத்திரகாளி அம்மன் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவுள்ளதால், தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வந்து சிறப்பித்து ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்;

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி ஜோ. தியாகராஜகுருக்கள்
வல்லியானந்தம் பிள்ளையார் கோவில்,
கரவெட்டி.

திருமதி நா. சபாபதிக்குருக்கள்
17 A, மயுரா பிளேஸ்,
கொழும்பு - 06

வரவேற்பாளர்கள்:

தி. நித்தியானந்தசர்மா தம்பதிகள் - ஹொலண்ட்
சி. சிவராமலிங்கசர்மா தம்பதிகள் - மலேசியா
க. புவனேந்திரசர்மா தம்பதிகள் - துன்னாலை

சோ. பாலகிருஷ்ணசர்மா
சித்தன்கேணி,
யோ. பிரபாகரேஸ்வரசர்மா
தம்பதிகள் - வேலணை

(9300)

யாழ். செயலகத்திற்குத் தேவையான
மரத்தளபாடங்களை
செய்து வழங்குவதற்கான

## கூறுவிலை கோரல்

யாழ் செயலகத்திற்குத் தேவையான பின்வரும் மரத் தளபாடங்களைச் செய்து வழங்குவதற்கான கூறுவிலைகள் என்னால் கோரப்படுகின்றன.

### மரத்தளபாட விபரம்

1. பதவிநிலை உத்தியோகத்தர் மேசை
2. எழுதுவினைஞர் மேசை
3. சிற்றூழியர்களுக்கான சாதாரண மேசை
4. கைப்பிடிக் கதிரை
5. சாதாரண கதிரை
6. மடிப்பு ஸ்கிறீன்
7. மகாநாட்டு மேசை
8. கோவை அடுக்குர் றாக்கை (பெரிது)

மேற்படி தளபாடங்களுக்கான கூறுவிலைப் படிவங்களை அரசாங்கத் திணைக்களங்களில் ரூபா 500,000/-க்கு மேல் ஒப்பந்தகாரராகப் பதிவுசெய்யப்பெற்ற ஒப்பந்தகாரர்கள் தங்கள் பதிவுப் புத்தகங்களைச் சமர்ப்பித்து 12-09-94 தொடக்கம் 16-9-94 ஆம் திகதிவரை காரியாலய நேரத்தில் மு. பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 00 மணிவரை மீளளிக்கப்படக் கூடிய கட்டுப்பணமாக ரூபா 500/-ம், மீளளிக்கப்படாத கட்டுப்பணமாக ரூபா 200/-ம் செலுத்தி செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

பெற்றுக் கொள்ளப்பட்ட படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு செயலக காரியாலய உதவியாளரின் அலுவலகத்தில் உள்ள கூறுவிலைக்கான பெட்டியில் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''செயலகத்திற்கான தளபாடங்கள் செய்து வழங்கல்'' என எழுதப் பெற்று அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு அரக்கு முத்திரையினால் சீல் இடப்பட்டு 21 09-94ஆம் திகதி மு. பகல் 11.00 மணிக்கு முன்னதாகப் போடப்படல் வேண்டும்- அன்றையதினமே பி. பகல் 2 00 மணிக்குக் கூறுவிலைப் பத்திரங்கள் திறக்கப்படும்.

மேற்படி வேலைகள் சம்பந்தமான மேலதிக விபரங்களைச் செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் தெரிந்து கொள்ளலாம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்;
01-09-94

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்-

(சி-10274)

★ **விஜி** (விஜியராகவன் - ஒட்டிசுட்டான்- முல்லைத்தீவு)

★ **வரன்** ( - மகேஸ்வரன் - பொக்கணை)

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவு - சிலாவத்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**பைரவி** (சங்கரப்பிள்ளை பார்த்திபன் - 3-ம் குறிச்சி, மண்டூர் 03 - மட்டு)

**கோபிநாத்** (விஜயன் குமார் - முறக்கொட்டாஞ்சேனை - மட்டு)

**லெப். பெரியண்ணன்** (ஐயாத்துரை அமிர்தலிங்கம் - 1-ம் வட்டாரம் - மணலாறு)

**கோபால்** (வேலாயுதம் சிவலிங்கம் - கொக்குத்தொடுவாய்- மணலாறு)

**2-ம் லெப். சுதாகர்** (பரமானந்தன் மணிவண்ணன்- புகையிரத நிலைய வீதி - மன்னார்)

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். அகிலன்** (கந்தையா தேவதேவா - இருதயபுரம் - மட்டு)

**சுது** (அமரசிங்கம் மணியம் - 8-ம் வட்டாரம், கொக்கட்டிச்சோலை-மட்டு)

**2-ம் லெப். ஈசன்** (சுப்பிரமணியம் பாலகிருஷ்ணன்- கணேசபுரம்- மன்னார்)

**செட்டி** (பாக்கியநாதன் பிறேம்குமார் - விடத்தல்தீவு- மன்னார்)

**2-ம் லெப். பிறேம்குமார்** (கந்தையா தயாபரன்- கரவெட்டி மத்தி-யாழ்)

1992ஆம் ஆண்டு மட்டுநகர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். தமிழ்நேசன்-ஜெயராம்** (சுப்பிரமணியம் ரமேஸ் - பெரியகல்லாறு- மட்டு)

**சுபாகரன்-அனுசன்** (சங்கரப்பிள்ளை குணாளன்- கல்லடி - மட்டு)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும், இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்-

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10271)

## வீடமைப்புக் கடன் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

கிராமப்பகுதிகளில் வீடுகளை கட்ட விருப்புவர்களுக்கு 15 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரை கடனுதவியாக வழங்கப்படவுள்ளதாக வீடமைப்பு நிர்மாணத்துறை, பொதுவசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா அறிவித்துள்ளார்.

நாடுபூராவும், கிராமப்பகுதி மக்களின் வீட்டுத் தேவைகள் பற்றிய விபரங்களை உடனடியாக திரட்டுமாறும், அமைச்சு அதிகாரிகளுக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கு முன்னர் கிராமப் பகுதிகளில் வீடுகட்டுவோருக்கு கடனுதவியாக 7500 ரூபா வரையே வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## தொண்டமான் எப்போதும் நம்பக்கூடிய ஒரு மனிதர்

-ஜே. ஆர். ஜெயவர்த்தனா

(கொழும்பு)

ஒரு மனிதனை நம்பக்கூடியதாக இருக்க வேண்டும். இந்தப் பண்பினை தொண்டமானில் நூறுவீதம் காணலாம் நான் தொண்டமானை நம்பக்கூடிய நண்பனாகக் கருதுகிறேன் என முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனா கூறியுள்ளார்.

கொழும்பில், அண்மையில் நடைபெற்ற தொண்டமானின் பிறந்த தின வைபவத்தில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். தொண்டமான் சொன்ன சொல் தவறமாட்டார். பாராளுமன்றத்தில் தீர்மானமொன்றை நிறைவேற்ற எமக்கு ஆதரவளிப்பதாக அவர் கூறுவார். விவாதத்தின் போது மறைந்து விடுவார். ஆனால் வாக்களிக்கும் தினத்தன்று அவர் நிச்சயமாக சமுகமளித்திருப்பார் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஒவ்வொரு கிராமத்திற்கும் தொலைபேசி வசதி கிட்டும்

- தகவல்துறை அமைச்சர்

(கொழும்பு)

ஒவ்வொரு கிராமத்திற்கும் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படும். இவ்வாறு தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், பின் தங்கிய கிராமப்புறங்களிலும் கூட ஊரின் மத்தியில் அல்லது ஒரு சமயத்தலத்தில் தொலைபேசி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு தொலைபேசி வசதி பரவலாக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அத்துடன், அவசர செய்திகளை பரிமாறுவதற்காக ஒருவர் மாதச்சம்பள அடிப்படையில் நியமிக்கப்பட்டு, அவரது சம்பளம் தொலைபேசியின் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட்டு வசூலிக்கப்பட்டு வழங்கப்படும் எனவும், இது போன்ற தொலைத்தொடர்பு அமைப்பு தாய்லாந்தில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் அரசாங்கத்திற்கும் தனியார் துறையினருக்கும் இடையே ஆரோக்கியமான போட்டி நிலவவேண்டும் எனவும், அதன் மூலம் பாவனையாளர்கள் பயனடையும் வாய்ப்பு அதிகமாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

## பொருளாதார தடை நீக்கத்திற்காக போராட்டத்தை கைவிடமுடியாது

- அருட்திரு. ஜெபநேசன் கருத்து

(யாழ்ப்பாணம்)

பொருளாதாரத்தடைநீக்கம், யுத்த நிறுத்தம் போன்றவற்றால் மட்டும் தமிழ் மக்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டுவிட முடியாது. இவ்வாறு சிங்கள மக்கள் மத்தியில் யாழ் மறை மாவட்ட மனித முன்னேற்ற நிலைய இயக்குனர் அருட்திரு ஜெபநேசன் எடுத்து விளக்கினார்.

தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரசாங்கங்கள் பிரயோகித்த அடக்கு முறைகளும் அட்டூழியங்களும் போராட்டத்தின் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்த போராட்டமானது கணிசமான வரலாற்று எல்லைவரை சென்றுள்ளது. இந்த நிலையில் பொருளாதார தடை நீக்கம் யுத்தநிறுத்தம் என்பன எமது பிரச்சினைகளை எமது உரிமைகளை சமாதானமாக தீர்ப்பதற்கான பாதைகளை சீராக்கும் நடவடிக்கைகளே. இந்த சமாதான நடவடிக்கைகள் ஆக்கபூர்வமானதாக அமைய வேண்டும் அப்போது தான் அதன்மூலம் சிறந்த பலாபலன்களை அடைய முடியும் என அவர் மேலும் விளக்கியுள்ளார். (88)

## ஐ.தே.கவுடனான உடன்பாடு இப்போது செல்லுபடியற்றது

-தொண்டமான்

(கொழும்பு)

தேர்தலுக்கு முன்பாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடு இப்போதும் செல்லுபடியற்றது என்று இ.தொ.காவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். தொண்டமான் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் காமினிதிசாநாயக்காவுடனும் ஐ.தே.க பொதுச் செயலாளர் காமினி விஜேசேகரவுடனும் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர் மேலும் கூறுகையில் உறுதியான அரசு ஒன்றை அமைப்பதற்காகவே ஐ தே கவுடன் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டதாகவும், அது இப்போது காலாவதியாகி விட்டதாகவும் தெரிவித்தார்.

கட்சி மாற முற்பட்டால் தொண்டமான் பதவிதுறக்க நேரிடும் என்று ஐ தே.க பொதுச் செயலாளர் எச்சரிக்கை செய்த பின்னர் தொண்டமான் இவ்வாறு கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## இனப்பிரச்சினைக்கான தீர்வு தளர்பலின்றி முன்வைக்க வேண்டும்

- சந்திரசேகரன்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் போர்நிறுத்தத்தில் காட்டும் அக்கறையை இனப்பிரச்சினைக்கான தீர்விலும் எந்தவிதமான தளம்பலுமின்றி உறுதியோடு வெளிப்படுத்த வேண்டும் என மலையக மக்கள் முன்னணித் தலைவரும், வர்த்தக, வாணிப, உணவுத்துறை பிரதி அமைச்சருமான பெ. சந்திரசேகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தலவாக்கலையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது; தமிழர்களின் பிரச்சினைகளுக்காக பேச்சுவார்த்தைகளை துரிதமாக ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அரசு எந்தவித முன் நிபந்தனைகளுமின்றி அரசியற் பிடியை சற்று தளர்த்தியிருப்பதை நல்லதோர் அம்சமாக கருதவேண்டும். அவர்கள் திருப்ப முயன்றாலும், அதற்கெல்லாம் அசைந்து கொடுக்காத திடமான தலைமைத்துவம் தற்போது இலங்கைக்கு தேவைப்படுகின்றது. அத்தகைய உறுதியும், தெளிவான அரசியல் கண்ணோட்டமும் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவுக்கு இருப்பதாக நாம் நம்புகின்றோம்.

இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முயற்சி எடுத்த பெருமையோடு திருப்தியடைந்து விடாமல், இப்பிரச்சினைகளுக்கு தீர்வு கண்ட பெருமையையும் பிரதமர் தனதாக்கிக்கொள்ள வேண்டும் எனவும் மலையக மக்கள் முன்னணி எதிர்பார்க்கின்றது என அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

## தேசிய கொள்கை முடிவுகள் ஆராய்வில் இரகசியமிராது

-பிரதி பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

தேசிய கொள்கைகள் பற்றிய தீர்மானங்கள் இரகசியமான முறையில் ஆராயப்படமாட்டாது என பிரதிபாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

வடபகுதிக்கு நேற்று முன்தினம் அவர் உத்தியோக பூர்வ விஜயமாக பல படைமுகாம்களுக்கு சென்றபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இனப்பிரச்சினையை தீர்த்து வைக்க

## பிறந்தநாள் வாழ்த்து



## நாய்களுக்கு

## நவ.18-ல் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படலாம்

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் செப்டம்பர் 22-ம் திகதியன்று முதல் கோரப்படும் எனவும், நவம்பர் 18-ம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடாத்தப்படும் எனவும் நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

இதேவேளை ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக பொது ஜன ஐக்கிய முன்னணி நாடு முழுவதிலும் தேசிய அடிப்படையிலான கருத்துக் கணிப்பீடு ஒன்றை மேற்கொண்டு இருப்பதாகவும், எமது நடவடிக்கைகள் தொடர்பாக மக்களின் கருத்து என்ன என்பதை அறிவதற்கான முயற்சியாக இது அமையும் எனவும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி. எம். ஜயரத்தினா கூறியுள்ளார்.

## பள்ளிக்குசெல்லாத ஆசிரியர் விபரம் திரட்ட பணிப்பு

(நல்லூர்)

இரண்டு மாதங்களுக்கு மேல் பாடசாலைக்கு சமுகமளிக்காத ஆசிரியர்களின் பெயர் விபரங்களை உடன் தமக்குத் தெரியப்படுத்துமாறு யாழ். நல்லூர் கோட்டக்கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புலந்திரன் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ் கல்வித்திணைக்களத்தில் நடைபெற்ற நல்லூர்- யாழ். கல்விக்கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டத்தில் மேற்படிவிபரங்களை அறிவிக்குமாறு அவர் கேட்டதுடன் பாடசாலைக்குப் பொறுப்பான அதிபர்கள் லீவில் செல்லும் போது அவருக்காக பதில் கடமை புரியும் ஆசிரியர் அல்லது பிரதி அதிபரின் அனுமதியைப் பெற்றுச் செல்ல வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (17)

## மாவட்டங்கள் தோறும் லஞ்ச ஒழிப்பு ஆணையாளர்

[கொழும்பு]

மாவட்டங்கள் தோறும் இலஞ்ச ஒழிப்பு ஆணையாளரின் பணி விஸ்தரிக்கப்படவுள்ளதாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் இலஞ்ச ஒழிப்பு ஆணையாளர்கள் நியமிக்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதித் தேர்தலில் ஜே. வி. பி. வேட்பாளர்?

(கொழும்பு)

சிறிலங்காவின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில், இதுசாரி இயக்கத்தின் சார்பாக ஒரு வேட்பாளர் நியமிக்கப்படுவார். இவ்வாறு லண்டனிலுள்ள ஜே வி. பி. இயக்கத்தின் சார்பாக வெளியிடப்பட்டிருக்கும் ஒரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விஞ்ஞான பூர்வமாகவும் வன்முறையற்ற வழியிலும் செயற்பட்டு உண்மையான மனித நாகரிகம் மிக்க சமுதாயம் உருவாக ஜே. வி. பி. பாடுபடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாழைச்சேனை பகுதியில் கடைகள் தீக்கிரை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதியில் இரண்டு கடைகள் எரித்து சாம்பலாக்கப்பட்டுள்ளன. கடந்த புதனன்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது- இக்கடைகள் எரிந்து நாசமாகியமையால் ஐந்து லட்சம் ரூபாவுக்கும் அதிகமான நட்டம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.



ஸ்ரீராஜவரோதயன் - காஞ்சனா
தம்பதிகளின்
அருப் புதல்வன்

## ஸ்ரீ ராஜ் அருணன்

இன்று (6-09-1994) ஜேர்மனியில் தனது முதலாவது பிறந்த நன்னாளை மகிழ்வுடன் கொண்டாடும் வேளையில்;-

முல்லை மொட்டு முகிழ்த்து வெடிக்கும் - அருண்
பிள்ளைச் சிரிப்பில் அமுதம் சொட்டும் ...
கைகளும் கால்களும் நாடகம் ஆடும் - அருண்
மழலைத் தமிழோ நம் மனதை மயக்கும்

தாயின் மடியிலும் தந்தையின் பிடியிலும் - அருண்
தாவிடும் அழகே ஒரு தனியடா ...
குறும்புகள் செய்திட குறுநகை தேங்கிட - அருண்
கன்னம் குழிவிழும் அழகே ஒரு அழகடா.

வரோதயன் -காஞ்சனா வாழ்வினில் வந்த வசந்தமடா - அருண்
அள்ளக் குறையா அன்பைத் தருவோம் ஆண்டவன் -கருணையடா
பொங்கும் இன்பம் எங்கும் தங்கிட அகவையொன்றினிலே - அருண்
ஆயகலைகள் அனைத்தும் பெற்றிட வாழ்த்துவோமே
நாம் வாழ்த்துவோமே.

''அன்னை இல்லம்''
குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.
6.09.94

குடுப்பத்தினர்
உறவினர்கள்
நண்பர்கள்
(9287)

---

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இனப்பிரச்சினையை தீர்த்து வைக்க இதற்கு முன் மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகள்தோல்வி கண்டதாகவும் இதற்கு மக்கள் ஆதரவின்மையே காரணம் எனவும் அமைச்சர் படையினரிடையே பேசுகையில் குறிப்பிட்டார்.

பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு தன்னாலியன்ற சகல வழிமுறைகளிலும் முயல்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர் ரத்வத்தபலாலி, காரைநகர், வேலணை, ஆனையிறவு, பூநகரி ஆகிய படைமுகாம்களுக்கு விஜயம் செய்தார். இவருடன் இராணுவ கடற்படை தளபதிகள், மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா ஆகியோரும் உடன் சென்றிருந்தனர்.

னைகளுமின்றி அரசியற் பிடியை சற்று தளர்த்தியிருப்பதை நல்லதோர் அம்சமாக வரவேற்கிறோம். அதேபோல, தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசியல் நேர்மையோடு, பேச்சுவார்த்தையில் தங்களுக்கிருக்கும் அக்கறையை வெளிப்படுத்துவதாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பொலிசாரை விடுதலை செய்திருப்பது மகிழ்ச்சிக்குரியதும் பாராட்டுக்குரியதுமாகும்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினை என்பது யுத்த நிறுத்தத்தோடு மட்டும் முடிவடையக்கூடியதல்ல. அதைவிட பிரதானமான தமிழர்களின் அரசியற் பிரச்சினை முற்றாகத் தீர்க்கப்படுவதிலேயே ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்பட முடியும். எனவே யுத்த நிறுத்தத்தில் காட்டும் அக்கறையை தமிழர் பிரச்சினைகளை முற்றாகத் தீர்ப்பதிலும் அரசு காட்டவேண்டும்.

எத்தகைய விமர்சனங்கள் வந்தாலும், இந்த முயற்சியை தீயசக்திகள் பிழையாக திசை

---

தெரிவித்துள்ளார்.

## நாய்களுக்கு தடுப்பூசி

வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த்தடுப்பூசி போடும் நடவடிக்கைகளை பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகமும் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி அலுவலகமும் இணைந்து கரவெட்டியில் ஆரம்பித்துள்ளன இன்று கலட்டி சனசமூக நிலையத்திலும் 9 ஆம் திகதி முருகன்கோவிலடி சனசமூக நிலையத்திலும் 10 ஆம் திகதி வதிரி சனசமூக நிலையத்திலும், 12 ஆம் திகதி தேவரையாளி சனசமூக நிலையத்திலும், கட்டைவேலி சனசமூகநிலையங்களிலும்வைத்து இலவச விசர்நோய்த் தடுப்பூசிகள் போடப்படுமென கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி பொ. இராமநாதன் அறிவித்துள்ளார். (25)

---

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்:

நிகழும் பவ ஆண்டு ஆவணி மாதம் 25-ம் திகதி (10-09-1994)
சனிக்கிழமை காலை 8 - 34 மணிமுதல் 9 - 00 மணிவரை
வரும் சுபமுகூர்த்த வேளையில்,

| | | |
|---|---|---|
| எமது புத்திரன் திருநிறை செல்வன் | ★ | எமது புத்திரி திருநிறை செல்வி |
| **பொன்னுத்துரை** | ★ | **சறோஜாமலர் B.A (Hons)** |
| (விற்பனை அபிவிருத்தித் திணைக்களம்) | ★ | (ஆசிரியை, அல்வாய் சின்னத்தம்பி |
| அவர்களுக்கும் | ★ | வித்தியாலயம்) அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் இனிதுற நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு
தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்

ஆ. வேலாயுதம்
பிள்ளைகள், மருமக்கள்
கைதடி கிழக்கு, கைதடி.

திரு, திருமதி ந. தில்லைநடராஜா
(குடும்பத்தினரும்)
புலோலி தெற்கு, புலோலி.

(9286)

---

இரண்டு கடைகள் எரித்து சாம்பலாக்கப்பட்டுள்ளன. கடந்த புதனன்று அதிகாலை நான்கு முப்பது மணியளவில்

மையால் ஐந்து லட்சம் ரூபாவுக்கும் அதிகமான நட்டம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

## குண்டு வெடிப்பிற்கு கோஷ்டி மோதலே காரணம்

(கொழும்பு)

மருதானை மகிந்த மாவத்தையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குக் கோஷ்டி மோதலே காரணம் எனக் கொழும்பு பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவத்தில் இரண்டு சிறுவர்கள் உட்பட ஏழுபேர் படுகாயமடைந்தது குறிப்பிடத்தக்கது.

## மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பொருட்கள் எடுத்துவர அனுமதி

(வவுனியா)

தாண்டிக்குளம் தடைமுகாமினுடாக, சொக்லட் வகைகள், சுவிங்கம் வகைகள் தவிர்ந்த ஏனைய மருந்து வகைகள், பிஸ்கட் வகைகளையே கொண்டுசெல்ல பயணிகளை அனுமதிக்குமாறு தாங்கள் பணிக்கப்பட்டிருப்பதாக தாண்டிக்குளம் தடைமுகாம் இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பு பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

தேங்காய் எண்ணெய், சவர்க்காரம் போன்ற பொருட்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கால்நடை திணைக்களத்திற்கு ஒட்டோ வந்தது

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய கால்நடை சுகாதார திணைக்களத்தின் பாவனைக்கென, ஒட்டோ ஒன்று அண்மையில் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளது. இதனால், திணைக்கள நடவடிக்கைகள் மேலும் இலகுவடையுமென, திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

## 3வது ஆண்டுநிறைவும் விளையாட்டுப் போட்டியும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளை கருணாநிதி விளையாட்டுக் கழகத்தின் 3-வது ஆண்டு நிறைவையொட்டி வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான சுழல் கேடய மென்பந்து சுற்றுப் போட்டி (கிறிக்கற்) யை ஆரம்பித்துள்ளது. இப் போட்டி தும்பளை கணக்கிலாவத்தை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. (25)

## காய்ச்சல் பரவுகிறது

(யாழ்ப்பாணம்)

கெற்பலி பண்டிதர் குடியிருப்பு மக்களிடையே தற்போது காய்ச்சல் பரவி வருகின்றது. குடியிருப்பு வாசிகளில் சுமார் இருநூறு பேர்வரை சாதாரண காய்ச்சலினாலும் 20 பேர் வரை மலேரியாக் காய்ச்சலினாலும் பீடிக்கப்பட்டுள்ளதாக குடியிருப்பில் வைத்திய சேவையை மேற்கொள்ளும் ஸ்தாபனங்களின் 'வட்டாரங்கள்' கூறியுள்ளன அத்துடன் ஒரு சிலரிடையே மூளை மலேரியா பரவியிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (22)

# யாழ். மாநகராட்சி மன்றம் நடத்திய சமய அறிவுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு யாழ் மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழுவினரால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்கள் பெயர் விபரம் வருமாறு:

இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நாளை புதன்கிழமை பி.ப 2 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும். போட்டிகளில் முதலிடங்களைப் பெற்றவர்களுக்கு தங்கப்பதக்கமும், ஏனையவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

## சமய அறிவுப் போட்டி

கீழ்ப்பிரிவு

முதலாம் இடம் - செல்வி ஏரம்பமூர்த்தி கார்த்திகா, யா - வேம்படி மகளிர் கல்லூரி.

இரண்டாம் இடம்- செல்வி ஜெயரட்ணம் ஜெயசாந்தி, யா -இந்துமகளிர் கல்லூரி.

மூன்றாம் இடம் - செல்வி சிவபாதசுந்தரம்நித்தியகலா, யா - கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.

தகைமை பெற்றோர்:

செல்வி கனகசிங்கம் இறைவி, யா - மகாஜனாக் கல்லூரி, செல்வி தர்மராஜா சுபாஷினி, யா - வேம்படி மகளிர் கல்லூரி. செல்வன் கேசவன் சஜீவன், யா - பரியோவான் கல்லூரி, செல்வன் நாகேந்திரம இராஜலக்ஷ்மன் யா - இந்துக்கல்லூரி, செல்வி கணேசலிங்கம் சுகன்யா, யா சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

மத்திய பிரிவு

முதலாம் இடம் - செல்வன் மகேந்திரராஜா பிரவீணன், யா - யூனியன் கல்லூரி

இரண்டாம் இடம் -செல்வி தனபாலசிங்கம் கௌரி, யா- யூனியன் கல்லூரி

மூன்றாம் இடம் - செல்வன் திருச்சிற்றம்பலம் கஜேந்திரன், யா - இந்துக் கல்லூரி

தகைமை பெற்றோர்:

செல்வன் குணரெட்ணம் செந்தூரன், யா - இந்துக்கல்லூரி, செல்வி மாணிக்கம் சுகன்யா, யா - வேம்படி மகளிர் கல்லூரி, செல்வன் சிவபாதரத்தினம் சிவரூபன், யா-

மேற்பிரிவு

முதலாம் இடம் - செல்வி சண்முகலிங்கம் கிருஷ்ணவதனா, யா - கொக்குவில் இந்துக் கல்லூரி

இரண்டாம்இடம்-செல்வன் கிருஷ்ணபிள்ளை குருபரன், யா - இந்துக்கல்லூரி

மூன்றாம் இடம் - செல்வி அருள்லிங்கம் சுஜீவா, யா - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

தகைமை பெற்றோர்:

செல்வி குணரட்ணம் பிரமிளா, யா - மகாஜனாக் கல்லூரி, செல்வி சிவபாதம் குமுதினி, யா - இராமநாதன் கல்லூரி, செல்வி முருகேசு சுகன்யா, யா - வேம்படி மகளிர் கல்லூரி, செல்வன் முத்துக்குமார் செந்தூரன், யா- கொக்குவில் இந்துக்கல்லூரி

அதிமேற்பிரிவு

முதல் மூன்று இடங்களுக்கும் எவரும் தகுதி பெறவில்லை

தகைமைபெற்றவர்:

செல்வி சிவபாதலிங்கம் மாதினி

## பண்ணிசைப் போட்டி

கீழ்ப்பிரிவு

முதலாம் இடம் - செல்வி அந்தோனிப்பிள்ளை ஜீவந்தினி, யா - மகாஜனாக் கல்லூரி

இரண்டாம் இடம் - செல்வி ரஞ்சன் தாரணி, யாழ்- வேம்படி மகளிர் கல்லூரி

மூன்றாம் இடம் - செல்வன் ரஞ்சன் கஜானனன், யா-இந்துக் கல்லூரி

தகைமை பெற்றோர்

செல்வி சாந்தகுமாரன் காயத்திரி, யா- இந்துமகளிர் கல்லூரி, செல்வன் இ சஸ்ரிக்குமரன், யா- பரியோவான் கல்லூரி, செல்வி அந்தோனிப்பிள்ளை சுகந்தினி, யா-மகாஜனாக்கல்லூரி, செல்வன் கணேசதுரை தீபன், யா - மகாஜனாக் கல்லூரி, செல்வி இராமலிங்கம் வாசுகி யா - இந்துமகளிர் கல்லூரி, செல்வி தர்மராஜா சுபாஷினி, யா- வேம்படி மகளிர் கல்லூரி, செல்வி சாந்தகுமாரன் கங்கா, யா- இந்துமகளிர் கல்லூரி

மத்திய பிரிவு

முதலாம் இடம் - செல்வி ஸ்ரீபாலச்சந்திரன் தாட்சாயினி, யா- இந்து மகளிர் கல்

தகைமை பெற்றோர்

செல்வி சண்முகசேகரம்பிள்ளை நிஷாந்தினி, யா- இராமநாதன் கல்லூரி, செல்வன் மனோகரன் ரதீஸ்குமார், யா- புனித பத்திரிசியார் கல்லூரி

மேற்பிரிவு

முதலாம் இடம் - செல்வி சிவபாலன் சிவரதி, நாவலடி, பன்னாலை. தெல்லிப்பழை

இரண்டாம் இடம் - செல்வி விக்ரர் வடிவாம்பிகை, யா - இராமநாதன் கல்லூரி

மூன்றாம் இடம்-செல்வி மார்க்கண்டு சூரியகுமாரி, புளியங்கண்டு பிள்ளையார் கோவில் ஒழுங்கை ஆனைக்கோட்டை

தகைமை பெற்றோர்

செல்வி தங்கலிங்கம் கீதாதேவி, 'திருமலைசாமிசர்மா' கோப்பாய் வடக்குகோப்பாய்

## பேச்சுப் போட்டி

மேற் பிரிவு

முதலாம் இடம் - செல்வன் முருகையா சதீஷ் பாலமுருகன், யா - மகாஜனாக் கல்லூரி

இரண்டாம் இடம் - செல்வன ஜெயராசா ஜெயகாந்தன், யாழ்- இந்துக் கல்லூரி

மூன்றாம் இடம் - செல்வன் முருகையா சிவபாலன், யாழ்- இந்துக் கல்லூரி

தகைமை பெற்றோர்

செல்வன் தவச்செல்வன் முகுந்தன், யாழ்-மத்திய கல்லூரி

கீழ்ப்பிரிவு

முதலாம் இடம் - செல்வி ஏரம்பமூர்த்தி சிவராமி, யா - இணுவில் இந்துக்கல்லூரி

இரண்டாம் இடம் - செல்வி இராமச்சந்திரா நிருஷா, சா- மகாஜனாக் கல்லூரி

மூன்றாம் இடம் - செல்வன் கணேசன் சேந்தன் யாழ்- பரியோவான் கல்லூரி

தகைமை பெற்றோர்

செல்வன் குணரெட்ணம் செந்தூரன், யாழ்- இந்துக் கல்லூரி, செல்வன் ஸ்ரீதயாளன் ஸ்ரீவிஜிந்திரன், யாழ்- இந்துக் கல்லூரி, செல்வன் தனபாலசிங்கம் கேதாரன், யா- சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், செல்வி வேலாயுதபிள்ளை பிரதாயினி, யா - வேம்படி மகளிர் கல்லூரி,

## கட்டுரைப் போட்டி

கீழ்ப்பிரிவு

முதலாம் இடம் - செல்வி தனபாலசிங்கம் கௌரி, யா- யூனியன் கல்லூரி

இரண்டாம் இடம் - செல்வன் குணரெட்ணம் செந்தூரன் யாழ். இந்துக்கல்லூரி

மூன்றாம் இடம் -செல்வன் மகேந்திரராஜா பிரவீணன், யா - யூனியன் கல்லூரி

தகைமை பெற்றோர்

செல்வன் கணேசன் சேந்தன், யா-பரியோவான் கல்லூரி, செல்வன் பொன்னுச்சாமி முருகதாஸ், யா-இந்துக் கல்லூரி

மேற் பிரிவு

முதலாம் இடம் - செல்வி தங்கவேல் தவனேஸ்வரி, தூர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை

இரண்டாம் இடம் -செல்வி சுப்பையா சாயரூபி, யா- இராமநாதன் கல்லூரி

மூன்றாம் இடம் - செல்வி சிவபாதசிங்கம் மாதினி, யா- கொக்குவில் இந்துக்கல்லூரி

தகைமை பெற்றோர்

செல்வன் கிருஷ்ணபிள்ளை குருபரன், யாழ் - இந்துக் கல்லூரி

## கவிதைப் போட்டி

கீழ்ப்பிரிவு

அதிவிசேட தரம்-செல்வன் மகேந்திரராஜா பிரவீணன், யா-யூனியன் கல்லூரி,

(1993ஆம் ஆண்டிலும் இவ்வாண்டிலும் இதே பிரிவில் முதலாம் இடத்தினைப் பெற்றிருப்பதனால் அதி விசேட தகைமை பெற்றமைக்கான சான்றிதழ் வழங்கப்படும்).

முதலாம் இடம் - செல்வன் கிருஷ்ணபிள்ளை குருபரன், யாழ் - இந்துக்கல்லூரி

இரண்டாம்இடம்-செல்வன் கணேசன் சேந்தன், யாழ்- பரியோவான் கல்லூரி,

மூன்றாம் இடம் - செல்வன் தர்மகுலசிங்கம் இராஜேந்திரா, யாழ் இந்துக்கல்லூரி,

மேற்பிரிவு

முதலாம் இடம் - செல்வன் தனபாலசிங்கம் ஜெயசீலன், இல, 328, பருத்தித்துறை வீதி, நல்லூர்,

இரண்டாம் இடம்-செல்வி சபாரத்தினம் பிரேமினி, யா-

## கந்தரனுபூதி பூர்த்திவிழா

(கொழும்புத்துறை)

திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களின் பிரதம சிஷ்யன்பிரசங்கபூஷணம் திரு நடேசன் சிவசண்முகமூர்த்தியின் ''கந்தரனுபூதி'' இசைப் பேருரை பூர்த்தி விழா இன்று 6-ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு நல்லை ஆதீனத்தில் ஆதீன சுவாமிகள் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் தொடர் விரிவுரை நடாத்தி வரும் திரு. ந. சிவசண்முகமூர்த்தி அவர்களின் சமயச்சேவையைப்பாராட்டி அடியார்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கவுள்ளனர். (24)

## ஏர்பூட்டும் விழாக்களுக்கு விரைவில் முற்றுப்புள்ளி

(கொழும்பு)

விவசாய அபிவிருத்தி என்ற போர்வையில் கோடிக்கணக்கான ரூபா செலவில் நடத்தப்படும் கொண்டாட்டங்களுக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும் இவ்வாறு விவசாய அபிவிருத்தி, காணி, வனவள அமைச்சர் டி.எம். ஜயரத்னா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் விவசாயிகள் தமது பிரச்சினைகளுக்கான பரிகாரத்தையே எதிர்பார்க்கின்றனர், அவர்களுக்கு வேண்டிய உதவியை வழங்கி அவர்களின்வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதே அரசாங்கத்தின் குறிக்கோளாகும்.

கோடிக்கணக்கான பணச் செலவீட்டில் நடத்தப்படும் தேசிய தினக் கொண்டாட்டங்கள் நடத்துவதும், ஏர் பூட்டு விழாக்கள் ஒழுங்கு செய்வதும் நிறுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் விவசாயிகளுக்கு சமூகத்தில்உரியஇடத்தைப்பெற்றுக் கொடுக்க அரசாங்கம் பாடுபடும்எனவும்சிறிய விவசாயிகள் பயிர்ச்செய்கைக்காக பெற்றுக்கொண்டகடன்களை மீள வசூலிப்பது இல்லை என அரசாங்கம் முடிவு செய்துள்ளது எனவும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி ஆட்சி முறையில் உடனடியாக மாற்றம் இராது

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி நிர்வாக முறையில், உடனடியான மாற்றம் ஏற்படுத்தப் படமாட்டாது என கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் கருதப்படுவதாக, தஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதாக குறிப்பிட்டாலும், அரசியலமைப்பை திருத்துவதற்குரிய மூன்றிலிரண்டு பெரும்பான்மையைபெறுவதிலும்,ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக அவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்துவதிலுமான பிரச்சினைகளை கருத்திற் கொண்டே, இவ்வாறான தாமதம் ஏற்படுவதாகவும் அரசியல் வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

நேர்தல் தொகுதி முறையிலும், போனஸ் ஆசனங்கள் வழங்கப்படுவதிலும் மாற்றங்கள் ஏற்படுத்துவதிலும் அரசு கவனம் செலுத்துவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## போக்குவரத்தை சீர்படுத்துவது இப்போது அவசியமானது

### - கொழும்பு வார இதழ் கருத்து

(கொழும்பு)

இன்றைய நிலையில் பூரணமாக யுத்த நிறுத்த முடிவையோ, அல்லது தொடரவிருக்கும் நடைமுறைகளைத் தெளிவுபடுத்துவதோ அரசாங்கத்தின் தீர்க்கமான முடிவுகளிலேயே தங்கியுள்ளதாக கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

நல்லிணக்க அடிப்படையில் தொடரும் நிகழ்வுகளில் அடுத்த கட்டமாக போக்குவரத்து வசதிகளை சீர்படுத்துவது அவசியமானது இதற்கான தெளிவான முறைமைகளை இணக்க அடிப்படையில் உருவாக்க முன்வரவேண்டும் ஆனையிறவிலிருந்தோ அல்லது பூநகரியிலிருந்தோ படையினரை வாபஸ் பெறும் பட்சத்தில் தான் இது தொடரப்பட முடியும்.

இராணுவ சோதனையின்றி மக்கள் சுதந்திரமாக செல்லக்கூடிய நிலைமையை ஏற்படுத்தும் வகையில் முதலில் பூநகரிப் பாதையை போக்குவரத்திற்கு ஏற்றதாக மாற்றுவது நடைமுறைக்கு சாத்தியமானதாக இருக்கும். பூநகரியில் சிறிய முகாம் இருப்பதால் அரசு முடிவுகளை ஏற்படுத்துவது சுலபமானதாக இருக்

## மட்டு. ஆலங்குளத்தில் இராணுவம் கெடுபிடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஆலங்குளம் பகுதியில்இராணுவத்தினரின் கெடுபிடிகள் அண்மைக்காலத்தில் அதிகரித்து இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக் கிராமப் பகுதியில் அடிக்கடி ரோந்துவரும் படையினர், தமிழ் மக்களை கண்ட இடத்தில் பிடித்து தாக்குவதுடன் அடையாள அட்டைகளைபறித்துச் செல்வதாகவும் கூறப்படுகிறது. பின்னர் அடையாள அட்டை இல்லாத

## அஜித் சமரநாயக்க நியமனம் பெற்றார்

சண்டே ஒப்சேவர் பத்திரிகையின் ஆசிரியராக அஜித்

ளிர் கல்லூரி, செல்வன் சிவ பாதரத்தினம் சிவரூபன், யா- மகாஜனாக் கல்லூரி, செல்வி சிவசுப்பிரமணியம் யாழினி, யா - வேம்படி மகளிர் கல்லூரி, செல்வி இராசலிங்கம் கல்யாணி, யா - யூனியன் கல்லூரி, செல்வன் ஏரம்பமூர்த்தி வித்தகன், யா - இந்துக் கல்லூரி, செல்வன் சிவராசா ஜெரோன், யா - இந்துக் கல்லூரி

ஸ்ரீபாலச்சந்திரன் தாட்சாயினி, யா- இந்து மகளிர் கல்லூரி

இரண்டாம் இடம் - செல்வி மகாலிங்கசிவம் லதாங்கி, யா- மகாஜனாக் கல்லூரி

மூன்றாம் இடம் - செல்வன் ஸ்ரீறங்கநாதன் தர்ஷணன், யா - இந்துக் கல்லூரி, செல்வி சிவபாதம் கவிதா, யா - ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி

யுதபிள்ளை பிரதாயினி, யா - வேம்படி மகளிர் கல்லூரி, செல்வன் பொன்னுச்சாமி முருகதாஸ் யா- இந்துக் கல்லூரி, செல்வன் மகேந்திரராஜா பிரவீணன், யா- யூனியன் கல்லூரி, செல்வி சிவசுப்பிரமணியம் யாழினி, யா- வேம்படி மகளிர் கல்லூரி, செல்வி பொன்னுச்சாமி சுவர்ணமுகி, யா-சாவகச்சேரி இந்துக் கல்லூரி

இரண்டாம் இடம்-செல்வி சபாரத்தினம் பிரேமினி, யா- சாவகச்சேரி இந்துக்கல்லூரி,

மூன்றாம் இடம் - செல்வன் சயனொளிபவன் முகுந்தன், யாழ்- இந்துக்கல்லூரி,

## தலைமை பெற்றோர்

செல்வன் மனோகரன்றதீஸ்குமார், யா - புனிதபத்திரிசியார் கல்லூரி, செல்வன்இராமச்சந்திரன் ஜனார்த்தன், யாழ்-இந்துக்கல்லூரி,

சண்டே ஒப்சேவர் பத்திரிகையின் ஆசிரியராக அஜித் சமரநாயக்க நியமனம் செய்யப்பட்டுள்ளார். செப்டம்பர் முதலாம் திகதி முதல் இவர் இப் பொறுப்பை ஏற்றுள்ளார் இதேவேளை பிரபல கல்விமானும், நாவலாசிரியருமான பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர லேக் ஹவுஸ் நிறுவனத்தின் விசேட ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

களைப்பறித்துச் செல்வதாகவும் கூறப்படுகிறது. பின்னர் அடையாள அட்டை இல்லாத நிலையில் மீண்டும் மீண்டும் கைதாகுவதாகவும், மோசமாகத் தாக்கப்படுவதாகவும் மேலும் கூறப்படுகிறது.

சிறிய முகாம் இருப்பதால் அரசு முடிவுகளை ஏற்படுத்துவது சுலபமானதாக இருக்கும். இம்முடிவுகள் சமயோசிதமாக தொடரப்பட வேண்டும் எனவும் அவ்விதழ் தெரிவித்துள்ளது.

# கட்சியின் பின்னடைவுக்கு விஜேதுங்கமீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவையும், கட்சி ஆதரவாளர்கள் கண்டபடி கைது செய்யப்படுவதையும் தடுக்க கட்சித் தலைவர் என்ற ரீதியில் டி. பி. விஜேதுங்க தவறிவிட்டதாக ஐ. தே. க. வின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் குற்றம் சாட்டியுள்ளனர்.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர் பொது ஜன ஐக்கிய முன்னணியின் அரசியல்கட்சிஆதரவாளர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதையும் பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றங்களை நிறுத்துவதற்கும் ஜனாதிபதி தவறிவிட்டார் எனவும் அக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக எடுக்கப்படவேண்டிய கட்சி நடவடிக்கைகள் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவரான காமினி திசாநாயக்காவே ஜனாதிபதி தேர்தல்வேட்பாளராகவும் போட்டியிட வேண்டும் என பலத்த அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# கல்விக்கல்லூரி அனுமதிக்கு பரீட்சைகள் நடத்தப்படாது

(கொழும்பு)

கல்வியியற் கல்லூரிகளில் மாணவர்களை அனுமதிக்க, எந்தவிதமான அனுமதிப் பரீட்சைகளும் இனிவருங்காலத்தில் நடத்தப்படமாட்டாது என கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

க பொ. த(உ/த) சித்தியடைந்த போதும், இவ்வாறான விசேட பரீட்சைகளின் மூலம்மாணவர்கள் இதுவரை அனுமதிக்கப்பட்டு வந்தனர். இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலொன்று இம்மாதம் வெளிவருமென்றும், 95ம் கல்வியாண்டில் இது நடைமுறையாகும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## சிரமதானம்

சித்தன்கேணி ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் அருகில் அமைந்துள்ள சித்தர் பெருமானால் ஸ்தாபிக்கப்பட்ட புண்ணிய தீர்த்தக்கேணி சிரமதானப் பணிகள் மூலம் புனருத்தாரணம் செய்து வைக்கப்பட்டது.

மேற்படி புனருத்தாரண புனிதப்பணியானது கடந்த சனிக்கிழமை காலை வலிமேற்கு பிரதேச செயலரும், மேலதிக அரசாங்க அதிபரும், புனரமைப்புக் குழுவின் போஷகருமான திரு. கா. சந்திரராசா அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சமயசமூகப் பணியாளரும் சட்ட அறிஞருமான எம். கே. சுப்பிரமணியம், முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ந. கதிர்காமநாதன். வலிமேற்கு சர்வோதய பிரதேச இணைப்பாளர் செல்வி. கி யோகேஸ்வரி தொல்புரம் மத்தி சர்வோதய கிராமோதய சமித்தியின் செயலர் கி. மகேந்திரம், ஆலயப் பிரதம குரு உட்பட அநேக மக்களும் கலந்து கொண்டு புனரமைப்புப் பணியினை மேற்கொண்டனர். மேலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இப் புனித தீர்த்தக் கேணியை புனரமைக்கும் பணி தொடர்ந்து நாளாந்தம் நடைபெற்று வருவதாக பணிக் குழுவின் செயலாளர் க. தணிகாசலம் தெரிவித்துள்ளார். (41)

# ஹேமா பிரேமதாசாவிற்கு நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவியான ஹேமா பிரேமதாசாவுக்கும் ஏனைய இருவருக்கும் ஹேபியஸ் கார்பஸ் மனுவின் கீழ் அவிசாவளை நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது

திருமதி பிரேமதாசாவின் பாதுகாவலில் இருக்கும் மல்காந்தி என்னும் சிறுமியை தன்னிடம் ஒப்படைக்குமாறு அவரது தந்தை சமர்ப்பித்துள்ள மனுவின் பிரகாரமே நீதிமன்றம் இந்த ஆணையை விடுத்துள்ளது.

கொஸ்கமவைச் சேர்ந்த சிமியோன் என்னும் மேற்படி நபரின் மகளான மல்காந்தி என்பவர் சிமியோனின் மனைவியின் மரணத்துக்கு பின் மனைவியின் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டார் மல்காந்தியின் கல்வி மற்றும் முன்னேற்றங்களை கருத்திற் கொண்டு செஞ்சிலுவைச் சங்கத்திடம் மல்காந்தியை அவரது பேத்தியார் கையளித்தார். சில காலத்தின் பின் செஞ்சிலுவைச்சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட மல்காந்தி வேலைக்காரச் சிறுமியாக திருமதி ஹேமா பிரேமதாசாவின் வசமிருப்பதை கண்டே இவ்வாறு மனுச்செய்துள்ளதாக சிமியோன் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்

தனது மகள், உடல், உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்

## கழகம் திறப்பு

(தென்மராட்சி)

கைதடி மேற்கு உதயநகர்ப் பகுதியில் கல்வி வளர்ச்சிக் கழகம் ஒன்று வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

கடந்த முதலாம்திகதி கல்வி வளர்ச்சிக்கழகத்தின் ஆசிரியை ராகினி தலைமையில் இடம்பெற்ற இவ் வைபவத்தில் முதலில் தேசியக் கொடியினை கைதடி வட்டப்பொறுப்பாளர் திரு குமரன் ஏற்றி வைத்தார். இதனைத்தொடர்ந்து கல்விக் கழகத்தினை தென்மராட்சிக் கோட்ட அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. கலைவாணன் திறந்துவைத்தார். பின்னர் கருத்துரைகள் இடம்பெற்றன. இதில் யாழ் மாவட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. அன்பரசன், ஆசிரியர்கள், கல்விப்பணிப்பாளர்கள் உரைநிகழ்த்தினர். இதனைத்தொடர்ந்து உதயநகர் கல்விவளர்ச்சிக்கழக மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும், தென்மராட்சி கலை பண்பாட்டுக்கழகத்தின் 'இனி ஒரு விதிசெய்வோம்' என்ற நாடகமும் இடம்பெற்றது.

## 90-ம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு:
10-03-1975

உதிர்வு:
09-06-1994

## இரத்தினசோதி கீதராகவன் (கீதா)

ஊருக்குள் அழகன் என்று உள்ளம் பூரித்தோம்
கொடுப்போருக்குமுதல்வன் என்று பெருமைப்பட்டோம்
எங்கள் வீட்டில் குல விளக்காய் ஒளி வீசிய அன்புச் செல்வமே
உன் நெஞ்சில் கொடியவனின் துப்பாக்கிக்குண்டு
உன் பூ உடலைப்பதம் பார்க்க யமன் வந்ததையா
எங்கள் அன்புச் செல்வமே! எங்கள் எல்லோரையும்
ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு சென்றாயே
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

இவரின் மரணச்சடங்கில் கலந்தோரையும், உற்றார், உறவினர் ஆசிரியர்கள் அனைவரையும் 6-9-94 இன்று இவரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தாய், தந்தை, சகோதரி
அத்தை மற்றும் உற்றார்
உறவினர். நண்பர்கள்

புன்னாலைக் கட்டுவன் வடக்கு. (9294)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் இளை நூலகம்

**சிந்தனைக்கு..**

மலர்களைக் கண்டு விரைவில் விரிகின்ற இதயங்கள் தான் முட்களாலும் முதலில் கிறப்படும்.

- தாமஸ் மூர்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 06 09-1994

தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண் 05

# ராணுவத்தின் யோசனை எதுவரை அனுமதிப்பது?

இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு என்பதில் அக்கறையை வெளிப்படுத்தும் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் - இது குறித்து சிறிலங்கா இராணுவத்துடன் பேச்சுவார்த்தைகளில்- ஒருவகையில் திருப்திப்படுத்தும் முயற்சியில்- ஈடுபட்டுள்ளது எனலாம்.

இந்த வகையில் இராணுவத்தரப்பில் இரு வேறு கருத்துகள் இருப்பது தற்பொழுது தெளிவாக வெளிவரத் தொடங்கியுள்ளது. இதில் ஒரு தரப்பினர் அரசாங்கம் கூறுவதைச் செய்வது எமது கடமை எனத் தெரிவிக்கின்றனர். மற்றைய தரப்போ அரசாங்கம் அரசியற் தீர்வு காண்பதில் தமக்கு ஆட்சேபமில்லை. ஆனால், யுத்த நிறுத்தமோ அன்றி இராணுவம் தற்போதைய நிலையில் இருந்து பின் வாங்காமலோ இருந்தால் அது விரும்பத்தக்கது என நிபந்தனையுடன் கூடிய ஆதரவைத் தெரிவித்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

சிறிலங்காவின் இன்றைய நிலையில் எந்த அரசாங்கமும் இராணுவத்தைத் திருப்திப்படுத்தாமல் யுத்த நிறுத்தமோ அன்றிப் பேச்சுவார்த்தையோ நடத்த முடியாது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயம் தான். ஆனால் இராணுவத்தின் நிபந்தனைகள், ஆலோசனைகள் என்பனவற்றைக் கேட்டு ஆட்சி நடத்த முடியாது என்பதும் முக்கிய விடயம் தான்.

ஏனெனில் இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு என்றால் அதற்கு இராணுவத்தின் அழுத்தத்தைப் பிரயோகிப்பது / அல்லது அழுத்த நிலையில் வைத்துக்கொண்டே பேச்சுவார்த்தைகளைத் தொடங்குதல் என்பது சாத்தியப்படப் போவதில்லை. இதன் மூலம் எட்டப்படுவது அரசியற் தீர்வாகவும் அமைய முடியாது.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வில் முன்னேற்றம் காணப்பட வேண்டும் என்றால் யுத்த

முன்னாள் அமைச்சர் மேற்கொண்ட

## காணி விற்பனை விவகாரம் லஞ்ச ஆணையாளர் கவனத்திற்கு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் ஒருவர் மேற்கொண்ட காணிப் பரிவர்த்தனை தொடர்பான விவகாரம் ஒன்று லஞ்சத் திணைக்கள அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு வரப்பட வுள்ளது. இவ்வாறு வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் நிமால்சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

சிறி ஜெயவர்த்தன புரப் பாராளுமன்றத்திற்கு சமீபமாகவுள்ள ஒரு காணித் தொகுதியை இந்த முன்னாள் அமைச்சர் ஒரு லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்தார் எனவும், இது காணித் திணைக்களப் பதிவுகள் மூலம் கண்டறியப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

சேரிப்புற மக்கள் வாழ்ந்த இப்பகுதி விற்பனை செய்யப்பட்ட பின்னர் நகர அபிவிருத்தி அதிகார சபை அதனைப் பொறுப்பேற்று அங்கு வசித்த மக்களை வெளியேற்றியதாகவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பான சகல விபரங்களும் தற்போது கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் அமைச்சர் தமது சொந்த லாபம் கருதியே இவ்விதம் செயற்பட்டுள்ளார் எனவும், இவ் விவகாரத்தை லஞ்ச ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வருவதை விடவேறு வழியில்லை எனவும் தெரிவித்தார்

## வலி மேற்கு ச.ச.நி.களுக்கு நன்கொடைகிடைக்கவில்லை

(தொல்புரம்)

கடந்த பல வருடங்களாக உள்ளூராட்சித் திணைக்களத்தினால் சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வந்த வருடாந்த நன்கொடை வலிமேற்கின் சனசமூக நிலையங்களுக்கு கிடைக்காததையிட்டு வடக்கு -கிழக்கு மாகாண ஆளுநருக்கு மகஜர் ஒன்றை அனுப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படி வருடாந்த நன்கொடை 1993-ஆம் ஆண்டு தொடக்கம் வலிமேற்கின் சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படவில்லை. இந்த நன்கொடைப்பணத்தை வருடம் தோறும் சனசமூக நிலையங்களுக்கு கிடைக்கும் வண்ணம் ஆவன செய்துதவு மாறும் ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறும் மாகாண ஆளுநருக்கு மகஜர் ஒன்றை தயாரித்து அப்பகுதி அனைத்து சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்கள் ஒப்பமிட்டு அனுப்பவுள்ளனர். (41)

## ஜனாதிபதி வேட்பாளராக அநுரவை நிறுத்தமுயற்சி

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே.க சார்பில் போட்டியிடும் வேட்பாளர் தெரிவு தொடர்பாக ஐ.தே.கவினுள் பெரும் இழுபறி நிலை காணப்படுவதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந் நியமனத்தை பெறுவது தொடர்பாக அநுரா பண்டாரநாயக்காவும் களத்தில் இறங்கியிருப்பதாக கூறப்படுகிறது. ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளராக ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா கட்சி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதும், பின்னர் காமினிதிசாநாயக்கா இவ் வேட்பாளர் நியமனம் பெற முயற்சி மேற்கொண்டிருப்பதும் தெரிந்ததே.

இப்போது காமினி திசாநாயக்கா ஜனாதிபதி வேட்பாளராவதை விரும்பாத சிலர் அநுரா பண்டாரநாயக்காவை ஜனாதிபதி வேட்பாளராக்க முயன்று வருவதாகக் கூறப்படுகிறது.

## கைதான ஐ.தே. கவினர் விபரம் திரட்டப்படுகின்றது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி, தனது ஆதரவாளர்களின் கைது தொடர்பான புகார்களை, கட்சி உறுப்பினர்களிடமிருந்து கோரியுள்ளது.

கட்சி பேச்சாளரான மகிந்த சமரசிங்க இது பற்றிக் கூறுகையில், சட்டத்தரணிகளின் அணியொன்று இப் புகார்களைவிசாரித்து சட்ட

# மேல்மாகாண சபையைக் கவிழ்க்க ஐ. தே. க. தொடர்ந்தும் முயற்சி?

(கொழும்பு)

மேல் மாகாண சபையை பொதுஜன ஐக்கிய முன்னணியிடமிருந்து கைப்பற்றவென ஐக்கிய தேசியக்கட்சி பல வகையிலும் முயற்சித்து வருவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது

மேல்மாகாண சபையிலிருந்து பொதுஜன ஐக்கிய முன்னணியின் பல உறுப்பினர்கள், பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர் இவர்களது வெற்றிடங்கள் தற்போது நிரப்பப்பட்டு வரும் வேளையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி லலித் பிரிவின் பல உறுப்பினர்கள்: இந்நியமனங்கள் தொடர்பாக அதிருப்தியடைந்துள்ளனர்

இது பற்றி கட்சித் தலைவியும் அமைச்சருமான சிறிமாணி அத்துலத்முதலிக்கும் அவர்கள் தெரியப்படுத்தியுள்ளனர் சபையில் தாங்கள் தனிக் குழுவாக நடுநிலை வகிக்கப் போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்

இவர்களது ஆதரவோடும் ஜி. எம். பிரேமச்சந்திரா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்கள் ஆதரவோடும் ஆட்சியமைப்பதில் ஐ. தே. க தீவிரமாக ஈடுபட்டுவருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## நெய் உற்பத்தி

முல்லை மாவட்டத்தில் குமுழமுனை, ஒட்டிசுட்டான் ஆகிய இடங்களில் நெய் உற்பத்தி செய்யும் நடவடிக்கையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்

வன்னி பெருநிலப்பரப்பில் கிடைக்கும்பாலைஉச்சப்பயன் பாட்டுக்குக் கொண்டு வரும் நோக்கத்தில் பால் சந்தைப் படுத்தல், பதனிடல், சிந்து பால் வெல்ல உற்பத்தி போன்ற பல்வேறு திட்டங்களில் ஒன்றாகவே இவ் நெய் உற்பத்தித் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது

பொது மக்களிடமிருந்து ஒரு லீற்றர் பால் ஏழு ரூபா விலையில் கொள்வனவு செய்யப்பட்டு ஆடைபிரிவு கருவிமூலம் ஆடை பிரிக்கப்பட்டு ஆடை நீக்கிய பால் தகுந்த முறையில் போத்தலில் அடைக்கப்பட்டு விநியோகிக்கப்படுவதுடன் ஆடை உருக்கப்பட்டு நெய்யாக்கப்படுகிறது.

இந்நடவடிக்கையின் மூலம் பால் உற்பத்தி ஊக்குவிக்கப் படுவதுடன் பலருக்கு வேலை வாய்ப்பும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது

## வீதி விளக்குகள் அமைக்கப்பட்டன

(தொல்புரம்)

தற்போது குடா நாட்டில் மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ள இவ் வேளையில் எமது வலிமேற்குப் பிரதேசத்தின் பிரதான வீதிகளில் வீதி விளக்குகளை ஏற்றிவைப்பதன் மூலம் நாம் எமது பிரயாணங்களை அசௌகரியமின்றி இரவில் தொடர மிகவும் உறுதுணையாக இந்த வீதிவிளக்குகள் அமைகின்றன.

## இறைச்சிப் பரிசோதனை

முல்லை மாவட்டத்தில் இறைச்சி நுகர்வோரின் நன்மைகருதி கால்நடைகளின் சுகாதாரம் பேணும் முகமாக இறைச்சிபரிசோதனைதிட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது,

இதன்படி சென்ற மாதம் ஒட்டிசுட்டான், நெடுங்கேணி, மணலாறு, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் அடிப்படையில் 117மாடுகளும் 86 ஆடுகளுமே இறைச்சிக்காக பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்திட்டத்தினாலும் கால்நடை முதலுதவிச் சிகிச்சை செய்யும் நடவடிக்கைகள் மூலமும் பாவனையாளர்களும் கால்நடை பண்ணையாளர்களும் பெரிதும் நன்மை அடைந்து வருவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## விளையாட்டுப் போட்டி நடைபெற்றது

(தொல்புரம்)

தேசிய சர்வோதய சிரமதான இயக்க ஆதரவுடன் இயங்கிவரும் சுழிபுரம் குடாக்கனை முரளி சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றன

மேற்படிபோட்டி நிகழ்வில் சுழிபுரம்காட்டுப்புலம் அரசினர்தமிழ் கலவன்பாடசாலை அதிபர் திரு. அ. சுப்பிரமணியம் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை அதிபர், சர்வோதய பிரதேச இணைப்பாளர்செல்வி கி யோகேஸ்வரி, தொல்புரம் மத்தி சர்வோதய கிராமோதய சமித்திச் செயலர் திரு. கி. மகேந்திரம், கடற்புலிகள் மகளிர் அமைப்பு செல்வி செல்வமலர் உட்பட மற்றும் சனசமூக நிலையத் தலைவர்கள், சமய சமூகத்தொண்டர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். போட்டி

## ஹூருளே ராஜினாமா

வடமத்தியமாகாண ஆளுநர் ஈ. எல். பி. ஹூருளே இராஜினாமா செய்துள்ளார், அவர் ஜனாதிபதியிடம் கடந்த வெள்ளி தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்தார்.

புதிய பிரதமர் நிர்வாக நடவடிக்கைகளை சுலபமாக மேற்கொள்ளவும் ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரிலும் தமது பதவியை இராஜினாமா செய்ததாக அவர் குறிப்பிட்டார்.

## கொடியேற்றம்

துன்னாலை சதாசகாய மாதா கோயில் கொடியேற்றம் நாளை புதன்கிழமை பிற்பகல் 5 00 மணிக்கு ஆரம்பமாகி சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு முதன்நன்மை பெறும் சிறுவர்களுக்கான திருப்பலியும் பிற்பகல் நற்கருணை வழிபாடும் இடம்பெறும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம் பெறும். (யோ)

## இரு சங்கிலிகள் திருட்டு

(கொழும்புத்துறை)

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நேற்றுத் தீர்த்தத் திருவிழாவின் போது இரு சங்கிலிகள் ஆலய உள்வீதியில் இனம் தெரியாத நபர்களால் காலை 7-50 மணியளவில் களவாடப்பட்டது.

அறுபது வயதுக்கு மேற்பட்ட இரு பெண்மணிகள் தங்கள் சங்கிலிகளைப் பறிகொடுத்து அழுது கொண்டு நின்ற அவலக் காட்சியை முருகன் சன்னிதானத்திலும் காவல் துறைப்பணிமனையி

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வில் முன்னேற்றம் காணப்பட வேண்டும் என்றால் யுத்த நிறுத்தம் என்பது அவசியம் என்பதோடு இராணுவ அழுத்தமும் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். இல்லாது போனால் அரசியற் தீர்விற்கான சூழ்நிலை உருவாக மாட்டாது இது இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளைப் பாதிப்படையச் செய்யக் கூடியதும் ஆகும்.

எடுத்துக் காட்டாக பொருள்கள் மீதான தடையை அரசாங்கம் சிறிது தளர்த்தியுள்ள போதும், அரசியற் பேச்சிற்கான சுமுகமான சூழ்நிலை ஏற்படவில்லை. இவ்விடயத்தில் நல்ல சூழ்நிலை ஒன்று உருவாகுவதற்கு இன்னமும் சிறிது காலதாமதம் ஏற்படும் எனச் சிலர் வாதிட முடியுமாயினும், வடமராட்சிக் கரையோரங்கள் மீதும், வலிகாமக் கரையோரங்கள் மீதும், மீன்பிடித் தொழிலாளர்கள் மீதும் சிறிலங்கா கடற்படை மேற்கொள்ளும் தாக்குதல்கள் மக்கள் தொடர்ந்தும் யுத்த சூழ்நிலையில் இருப்பதையே தெளிவுபடுத்துகின்றது.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதானால் அதற்கு முன்னர் பரஸ்பரம் நம்பிக்கையை வளர்க்கக் கூடிய நல்லதொரு சுமுகமான சூழ்நிலை அவசியமாகும். இது யுத்த நிறுத்தம் இன்றியோ அன்றிப் போக்குவரத்துப் பாதைகள் திறந்து விடப்படாமலோ உருவாகப் போவதில்லை என்பதே யதார்த்த நிலையாகும். இதனை முன்னாள் சிறிலங்கா விமானப் படைத் தளபதியான ஹரிகுணத்திலக்காவும் தெளிவாகவே வலியுறுத்தியுள்ளார். ''யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி பூநகரி - சங்குப்பிட்டி பாதையைத் திறப்பதன் மூலம் யாழ். குடாநாட்டு மக்கள் ஏனைய பகுதிகளுடன் தொடர்பு கொள்ளக் கூடிய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். இதுவே இருபகுதியினரிடம் நம்பிக்கையை வளர்க்கும்'' என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

முன்னாள் விமானப்படைத் தளபதியின் இக்கூற்றானது இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கு முற்படும் சந்திரிகா குமாரணதுங்கா அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டிய நல்லதொரு அறிவுரையாகும் அவ்வாறு இல்லாது யுத்தநிறுத்தம், போக்குவரத்து தடைநீக்கம் என்பனவற்றை ஏற்றுக் கொள்ளாத இராணுவத்தரப்பினரின் கருத்தை முதன்மைப்படுத்துவாரேயானால் இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியற்தீர்வை அவரால் கொண்டுவர முடியாது போகலாம். இந்நிலையில் இனப்பிரச்சினைக்கான அரசியற்தீர்வில் இராணுவத்தை எதுவரை அனுமதிப்பது என்பதை பிரதமர் சந்திரிகா விரைவிலேயே முடிவு செய்ய வேண்டும்.

---

களை, கட்சி உறுப்பினர்களிடமிருந்து கோரியுள்ளது. இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமான புகார்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்

புகார்களைவிசாரித்து சட்ட நடவடிக்கை எடுத்து வருவதாகவும், ஒவ்வொரு புகாரும் தனித்தனியாக ஆராயப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

## சதிப்புரட்சி வதந்தி பற்றி விசாரணை நடத்தவேண்டும்

### - இராணுவ அதிகாரிகள் கோரிக்கை

(கொழும்பு)

பொதுத்தேர்தல் சமயத்தில், இராணுவ சதிப்புரட்சி ஒன்றுக்கு திட்டமிடப்பட்டதாக வெளிவந்த செய்திகள் குறித்து, விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு, சதியில் சம்பந்தப்பட்டதாக கூறப்பட்ட மேலும் மூன்று இராணுவ அதிகாரிகள் ஜனாதிபதியை கோரியுள்ளனர்.

இது தொடர்பாக, இராணுவத் தளபதி லெப் ஜெனரல் ஜெரி டீ சில்வா ஊடாக ஜனாதிபதிக்கு அவர்கள் கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளனர். லெப் கேணல் அசோகா தொரதெனிய, லெப். கேணல் எம். ஆர். டபிள்யூ சொய்சா, மேஜர் அலிக் மல்லிமாராச்சி ஆகியோரே கடிதமெழுதியவர்களாவர்.

கடந்த மாதம் 17-ந் திகதி, இச்சதித்திட்டத்தின் இரண்டாம் கட்டம், மேற்படி மூன்று அதிகாரிகளில் ஒருவரான லெப் கேணல் சொய்சாவின் இல்லத்திலேயே ஆராயப்பட்டதாக செய்தி வெளியாகியிருந்தது.

இவ்வாறான செய்தி, வேண்டுமென்றே, அதிகாரிகளின் பெயர்களைக் கேவலப்படுத்தும் நோக்குடன் புனையப்பட்டதுடன், அரசியல் சாயமும் பூசப்பட்டது என இராணுவத் தலைமை அதிகாரியும், குறிப்பிட்ட சதிமுயற்சியில் ஈடுபட்டவரென கூறப்படுபவருமான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம கொழும்பு பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

முன்னதாக, மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவும், பிரிகேடியர் சரத் பொன்சேகா, கேணல் காமினி குணசேகர ஆகியோரும், சதி குறித்து விசாரணை நடத்தி உண்மை நிலையை அறியுமாறு ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது எனவும் தெரிவித்தார்.

---

வீதிவிளக்குகள் அமைகின்றன.

இவ்வாறு கடந்த வெள்ளியன்று வலிமேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தின் முன்பாக வீதி விளக்கினை சம்பிரதாய பூர்வமாக ஏற்றிவைத்த வலிமேற்கு பிரதேச செயலரும், விசேட ஆணையாளருமான திரு. கா. சந்திரராசா உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எமது பிரதேச சபையினால் ஏற்படுத்தப்பட்ட இந்த வீதிவிளக்கு அமைக்கும் திட்டத்தினை பிரதேசம் பூராக முழுமையாக செயற்படுத்த சற்று காலதாமதம் ஏற்பட்ட போதிலும் தற்போது 34 விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன

## அவசரகால சட்டத்தின்கீழ் 22,000 பேர் வரை கைது

### - மன்னிப்புச்சபை அறிக்கை

(கொழும்பு)

அவசரகால சட்ட விதிகளின் கீழ் கொழும்பில் மட்டும் 22,000க்கும் அதிகமான இளைஞர்கள் மற்றும் யுவதிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகவும், இவர்களில் மிக அநேகமானோர் தமிழர்கள் எனவும் 'அம்னெஸ்றி இன்டர் நாஷனல்' எனப்படும் சர்வதேச மன்னிப்புச்சபை அண்மையில் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

## எயர்லங்காவை நிர்வகிக்க புதிய பணிப்பாளர் சபை

(கொழும்பு)

எயர் லங்கா பணிப்பாளர் சபை புதிதாக பொறுப்பேற்றுள்ளது. சேபால ஆட்டிகல தலைவராகவும், ஜே. எச். ஜே. விஜேதாச ரோகினி நாணயக்கார ஆகியோர் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்,

தபா பெல்பெல ஆர். பாஸ்கரலிங்கம், காமினி மராப்பன ஆகியோரே முன்பிருந்த பணிப்பாளர் சபையில் இடம் பெற்றிருந்தனர் என்பது தெரிந்ததே.

## பிரிவுபசார விழா

வலிமேற்கு பிரதேச உதவி அரசாங்க அதிபராகவும் வலிமேற்கு பிரதேசசபை விசேட ஆணையாளராகவும் முன்னர் கடமையாற்றிய செல்வி ரூபினி கனகரத்தினம் அவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக பிரிவுபசார விழா ஒன்று அண்மையில் நடைபெற்றது. (41)

---

புரையாற்றினார். போட்டிகளில் பங்கு பற்றியவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (41)

## பாரதி விழா நடைபெற்றது

(தொல்புரம்)

மகாகவி பாரதி அவர்களை நினைவு கூரும் முகமாக சுழிபுரம் கல்லைவேம்படி கலைவாணி சனசமூக நிலையத்தினரால் ''பாரதி விழா'' வெகு சிறப்பாக நடாத்தப்பட்டது.

கல்லைவேம்படியில் சனசமூக நிலையத்துக்கு அருகாமையில் உள்ள அரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நிலையத் தலைவர் திரு. ஆ. மு கிருஷ்ணபிள்ளை தலைமையில் பாரதி விழா நடைபெற்றது. இவ் விழாவில் வலிமேற்கு பிரதேச சபை செயலாளர் திரு. க. திரவியம் சுழிபுரம் மத்தி கிராம சேவை அலுவலர் திரு க. கணேசலிங்கம் வைத்திய கலாநிதி பூ. கைலாயநாதன், தொல்புரம் மத்திய சனசமூக நிலையச் செயலாளர் கி. மகேந்திரம் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டு பாரதியாரின் சுதந்திர தாகத்தின் புத்துணர்வினைப்பற்றிசிறப்புரையாற்றினார்கள் அநேக மக்கள் கலந்து கொண்ட இப்பெருவிழாவில் பேச்சுக்கள் கவிதைகள் பட்டிமண்டபம்கும்மி. நடனம் ஆகிய சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன (41)

## குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்கலைப்புலவர் வீதி மெய்கண்ட தேவர் ஆதீனத்தில், நாளை, திருக்கைலாச பரம்பரை சந்தான குரவர் மறைஞானசம்பந்த நாயனார் குருபூசை, வழிபாடு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் திருவாசகமணி க. மாணிக்கவாசகர் சிறப்புரையும் இடம் பெறும்.

---

காவல் துறைப்பணிமனையிலும் காணக்கூடியதாக இருந்தது

சங்கிலியைப் பறிகொடுத்தவர்கள் விபரம் பின்வருமாறு

திருமதி சுப்பிரமணியம் தங்கேஸ்வரி கோப்பாய் தெற்கு இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலி

திருமதி இராசதுரை மனோன்மணி ஆனந்தபுரம்கல்வியங்காடு 2 பவுண் தங்கச் சங்கிலி

பெண்கள் இருவரும் சங்கிலித் திருட்டுப் பற்றித் தமிழீழ காவல்துறையில் முறைப்பாடு செய்துள்ளனர். (24)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994. 09. 06

செவ்வாய் இரவு

08. 01 - ஊர் சுற்றும் ஒலிவாங்கி

08. 10 - அறிந்துகொள்ளுங்கள் - தகவற்களஞ்சியம்

08. 20 - நலந்தானா - ''குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடாவிட்டால்ஏற்படும் ஆபத்துக்களும் ஆலோசனைகளும்''

08. 30 - செய்திகள்

08. 40 - கருத்துக்களம் - ''கடத்தல்''

08. 50 - களமும் காளமும் - ''உறவுகள்''

1994. 09. 07

புதன் காலை

07. 02 - மாவீரவணக்கம்

07. 15 - நீங்கள்கேட்டவை

07. 30 - செய்திகள்

07. 35 - பத்திரிகைச் செய்திகள்

07. 40 - நீங்கள்கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## பல்கலை நூலகப் பகுதிக்கு 'ஒப்செற்' அச்சுயந்திரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்திற்கென அண்மையில் கொண்டு வரப்பட்ட ''ஒப்செற்'' அச்சு இயந்திரம் யாழ் பல்கலைக் கழக நூலகப்பகுதியில் தொழிற்படவுள்ளது என துணைவேந்தர் தெரிவித்தார்.

இதன் மூலம் பல்கலைக்கழகத்திற்கான நூல்கள், சஞ்சிகைகள், வினாத்தாள்கள் மற்றும் ஆவணங்கள் என்பன அச்சிடக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறான நூல்கள், சஞ்சிகைகள் வினாத்தாள்கள் என்பனவற்றை பல்கலைக் கழகம் வெளியே இருந்தே அண்மைக்காலங்களில் அச்சிட்டுப் பெற்றுக்கொண்டது.

இவ் அச்சு இயந்திரம் தற்சமயம் வந்து சேர்ந்தது பெரிதும் நன்மை பயக்கக்கூடியது:

இவ் இயந்திரத்தினை இயக்குவதற்கென ஒருவர் பயிற்சி பெற கொழும்பிற்கு அனுப்பப்படவுள்ளாரெனவும் அவர் தெரிவித்தார்.

[பா]

## தலைமையும் அபிவிருத்தியும்

(தொல்புரம்)

''தலைமையும் அபிவிருத்தியும்'' என்ற தலைப்பிலான பயிற்சிக் கருத்தரங்குத் தொடர் யாழ். பல்கலைக் கழக புறநிலை படிப்புகள் அலகின் ஊடாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சி நெறியானது வார இறுதி நாட்களான சனி, ஞாயிறு கிழமைகளில் நடாத்தப்படும். வயது எல்லைகள் எதுவுமில்லை. ஆர்வமுள்ள ஆண் பெண் இருபாலாரும் இதில் கலந்து கொள்ளலாம். (41)

## வடபகுதி மக்கள் சிங்களவரைப் போல் சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டும்

### 'ராவய' ஆசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடபகுதி மக்கள் சிங்கள மக்கள் போல் சகல சுதந்திரத்தையும் அனுபவிக்க வழிவகை செய்ய வேண்டும் என ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார். சிறிலங்கா வானொலிக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் 10 யுத்தக் கைதிகளை விடுவித்துள்ளனர். சிறிலங்கா அரசு வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை சிறிது தளர்த்தியுள்ளது இவ்விடயம் வரவேற்கத்தக்கது ஆனால் இவை இறுதியான நடவடிக்கையல்ல. இன்னும் பல பிரச்சினைகளுக்கு முடிவு காண வேண்டும். அதற்கு ஓர் முன்னோடி நடவடிக்கையாக மட்டுமே இதை கருத முடியும். தென்பகுதி மக்கள் எப்படி வாழ்கின்றனர் என்பது வடபகுதி மக்களுக்கு பல வருடங்களாக தெரியாது வடபகுதி மக்கள் சுதந்திரத்துடன் வாழவேண்டும் என்றும் விக்டர் ஐவன் குறிப்பிட்டார்.

## சமாதான நடவடிக்கைகள் மேலும் தொடரவேண்டும்

### 'திவயின' பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சினை தீர்ப்பதற்கான நல்ல சமிக்கைகள் இரு தரப்பில் இருந்தும் கிடைக்கப்பெற்று வருவதாகவும் எனவே விரைவில் இருதரப்பினரும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டும் எனவும் 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

புதிய அரசாங்கம் வடபகுதி பொருட்களில் சில வற்றிற்கு இருந்த தடையை நீக்கியுளது. இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கம் தடுத்து வைக்கப்பட்டிருந்த பத்து யுத்தக்கைதிகளை விடுதலை செய்துள்ளது. இவை நல்ல சகுனங்கள் தொடர்ந்து சமாதான நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும் என அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

யாழ். ஸ்ரீதரில்

தினசரி காலை 10.30 மணிக்கு

WAY OF THE DRAGON

[கராட்டி]

—0—0—

தினசரி மாலை 4-00, 6-00 மணிக்கு

CIRCUS

இதனுடன்

BIG BOSS படத்திலிருந்து புறூஸ் லீயின் குங்ஃபூ சண்டைக் காட்சிகளும்,

RAMBO படத்திலிருந்து சில்வெஸ்டர் ஸ்டலோனின் சாகசக் காட்சிகளும் காண்பிக்கப்படும்.

—0—0—

பாடசாலையூடாக மாணவர்கள் தொடர்பு கொண்டால் காட்சிநேர கட்டணசலுகைகள் வழங்கப்படும்.

(சி-10 230)

## பாராளுமன்றம் இன்று கூடும

(கொழும்பு)

சிறிலங்காவின் பாராளுமன்றம் இன்று காலை 9 மணிக்கு கூடுகின்றது. இதன் போது வடக்கு-கிழக்கில் அவசரகால சட்டத்தை மேலும் நீடிப்பதற்கான பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட இருக்கின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் உட்பட அனுராதபுர, புத்தளம், பொலநறுவை ஆகிய மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடந்த முதலாம் திகதி

## வடக்கு கிழக்கு பிரச்சினையை புரிந்துணர்வுடன் அணுகுவேன்

### பிரதமர் சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்தகால அரசாங்கங்கள் வடக்குக் கிழக்குப் பிரச்சினையைப் பார்த்த கண்ணோட்டத்தில் நான் பார்க்க மாட்டேன். அதனை ஓர் புரிந்துணர்வுடனேயே பார்ப்பேன் என பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட பத்து பொலிசாரை பார்வையிட்டபோது மேற்படி கருத்தைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், வடக்கு கிழக்கில் இன்றுள்ள பிரச்சினை பற்றிய விபரங்களை தான் இன்னும் ஆராய்வதாகவும் இதனைத் தீர்ப்பதே தனது அரசாங்கத்தின் முழுமையான வேலையாக இருக்கும் எனவேஇதில் சகலதரத்தினரின் ஒத்துழைப்பு தேவைப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தாம் தடுத்து வைத்திருந்த பத்துப் பொலிசாரை விடுதலை செய்தமை குறித்து தான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைவதாகவும், எதிர்காலத்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக்களில் இதேபோன்று நட்புறவை விடுதலைப் புலிகள் காட்டுவார்கள் என தான் நம்புவதாகவும் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

தேசிய இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க தன்னால் நீட்டப்படும் நேசக்கரத்தை விடுதலைப் புலிகள் பற்றிக் கொள்வார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், இராணுவம் மற்றும் ஏனைய தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்பாகப் பூர்வாங்க அறிக்கையொன்றை மிக விரைவில் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் தாம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் கூறினார்.

பேச்சுக்களை

ளது எனக் கூறி வந்தது- இரு வருடங்களாக தலைவர் பிரபாகரன் சமாதானத்திற்கும் பேச்சுவார்த்தைகளுக்கும் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன போர்நிறுத்தம் செய்யுமாறு பல ஆயர்கள் மூலமாக கேட்டும் அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை- இதை நான் நன்கறிவேன்- எனவே இம்முறை சந்திரிகா தான் நேரடியாக பேச்சு நடத்த வேண்டும் என்றும் தமிழரின் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்றும் கூறியிருப்பதனால் அவரின் தேர்வை நாம் வரவேற்கிறோம்-

ஜனாதிபதி தான் பாதுகாப்பு அமைச்சர் பதவி வகிக்கிறார் இதனால் ஒரு சிக்கலான நிலைமை உள்ளது- சந்திரிகாவின் சமாதான முயற்சிகளை தடை செய்ய சில சக்திகள் முயலவே செய்யும் என்றும் வண. இமானுவல் அடிகளார் தனது பேட்டியில் மேலும் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளுடனான உங்களது உறவு எப்படி உள்ளது என பி. பி ஸி. செய்தியாளர் கேட்டதற்கு, மக்களுக்கு பாதுகாப்பையும் நெறிப்படுத்தலையும் வழங்கும் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொள்வது அவசியமானது- நாம் வாழ்வதற்கான பாதுகாப்பை வழங்கி வாழ உதவும் அவர்களுடன் நல்லுறவைக் கொண்டுள்ளோம் என அவர் பதிலளித்தார்-

சமாதானத்திற்கான ஆவல் விடுதலைப் புலிகளிடமும் உண்டா எனக் கேட்கப்பட்டபோது, நிச்சயமாக அவர்கள் சமாதானத்தை விரும்புகின்றனர்- அதற்காக யாரினதும் காலடியில் விழமாட்டோம் என கூறியுள்ளனர்- இதன் காரணமாக பெரும் மாற்றம் அல்லது இணக்கம் என்பது ஒரே இரவில் ஏற்பட்டு விடாது- எம்மை பொறுத்தவரை இது சமாதானத்தை நோக்கிய பயணமே எனக் கூறிய வண. பிதா இமானுவல் அடிகள் சிங்கள மக்கள் போரில் களைப்படைந்து விட்டனர் என்றும் அத்துடன் அவர்களிடம் பரஸ்பரம் நிறைய பிழையான அபிப்பிராயங்கள் இருப்பதையும் உணர்ந்து கொண்டுள்ளனர். சமாதானம் ஏற்படும் என்றே நம்புகிறேன் என்றும் குறிப்பிட்டார்-

### ஊர்வலத்தின்

பெறவோ இடம் அளிக்கப்பட்டிருக்க மாட்டாது என தொழில் அமைச்சர் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் பிரச்சினையை நல்ல முறையில் அணுக இருபத்தி நான்கு மணிநேரமும் தான் தயாராக இருப்பதாகவும் இதுகுறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்து உடன் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஊர்வலத்தின் பின்னணியில் சில எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் இருந்ததாகவும் இவர்களுக்கு உடந்தையாக பொலிசார் இந் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் தனக்கு தகவல் கிடைக்கப் பெற்றதாக மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

### வடபகுதிக்கு

தொலைக்காட்சி நிலையமும் ஒலிபரப்பு கூட்டுத்தாபன அஞ்சல் நிலையமும் பலாலியில் மீண்டும் இயங்க வைக்கப்படும் எனவும் தெரிவித்தார்-

வடபகுதியில் ாசனம், துறை

## சுருக்கிட்ட நிலையில் வயோதிபர் சடலம் மீட்பு

கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் குருநகர் தொடர்மாடி கட்டிட அறை ஒன்றினுள் இருந்த வயோதிபர் ஒருவரின் உடலை காவல் துறையினர் மீட்டுவந்து யாழ்- போதனா மருத்துவ மனையில் விசாரணைக்காக ஒப்படைத்துள்ளனர்-

குருநகரைச் சேர்ந்த அருளானந்தம் அந்தோனிப்பிள்ளை (வயது 55) எனும் இவர் கடந்த 15வருடங்களாக தனியாக வசித்து வந்ததாகவும் தெரியவருகிறது- (சி)

### அரசும்

த்திற்கு சென்ற அமைச்சர் அங்கு உரைநிகழ்த்துகையில், பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்வோம். எமது இத்தகைய முயற்சிக்கு விடுதலைப் புலிகள் ஒத்துழைக்காது விடின் இறுதித் தீர்வு யுத்தத்தை நோக்கித் தள்ளப்படும் என்றார்-

பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது யுத்த நிறுத்தம் அமுலுக்கு வருமா என சிப்பாய் ஒருவர் கேட்டார். இதற்கு அமைச்சர் யுத்த நிறுத்தம் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்க வேண்டிவரலாம் ஆனால் கடந்த காலங்களில் ஏற்பட்டது போன்ற ஏமாற்றங்கள் ஏற்பட ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது என பதிலளித்தார்.

தாராவிக்குளம் இராணுவ முகாமுக்கு விஜயம் செய்த அமைச்சர் அங்கு அமைதிபேச்சுக்களின் வேகத்தைபராமரிக்க விடுதலைப் புலிகளின் கைதிகளைவிடுவிக்கும்சாத்தியங்கள் குறித்து தாம் ஆராய்வதாக தெரிவித்தார்-

அமைச்சர் நேற்று மொறவேவ, முல்லைத்தீவு, வவுனியா படை முகாம்களுக்கும் விஜயம் செய்தார்- மேலும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக சமரசப் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகளிடம் இருந்து உத்தியோகபூர்வமான பதிலை

### ஓாசியன்

இதே வேளை லண்டன் பி- பி- ஸி- தமிழ்ச் சேவைப் பணிப்பாளரான ஆனந்தி மற்றும் இந்திய ருடேயின் தமிழ்ப்பதிப்பு ஆசிரியர் வாஸந்தி ரீட்டா செபஸ்ரியன் ஆகியோர் நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் வந்துள்ளனர்

மேலும் நியூஜோர்க் ரைம்ஸ் ஐச் சேர்ந்த ஜோன் பிஸ்ஸர் பேண்ஸ், வில்லியம் கல்கிலி, யு என் எச் சி ஆர் வவுனியா வதிவிடப் பிரதிநிதி டேவிட் அற்ரின் ஆகியோர் நாளை கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

### தொழிலாளர்

கம சந்திக்கு அருகே வந்து கொண்டிருந்த போது பொலிசார் தாக்குதலை நடத்தினர் என்றும் அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்ட பின்னர் ஊர்வலங்களுக்கு தடை விதிக்க முடியாது என ஊர்வலத்தில் சென்றவர்கள் வாதிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிசார் இவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதை அடுத்து ஊர்வலம் கலைந்து சென்று விட்டதாக தெரிய வருகின்றது-

### ஜனாதிபதி டி பி

சிறிலங்காவின் 9-வது பாராளுமன்றத்தின் பிரதமராக

டடும்.

(சி-10 230)


தென்னிந்திய திருச்சபை

## யாழ் - அத்தியட்சாதீனம்

தென்னிந்திய திருச்சபை - யாழ். ஆதீனத்தினால் நடாத்தப்படும் சாவகச்சேரி தொழிற்பயிற்சி நிலையத்தில் தமிழ், ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. இவ்வருடம் 'வைகாசி மாதம் இவ் வகுப்புக்களில் சேருவதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்தவர்கள் உடனடியாக பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொண்டு, அனுமதி அட்டைகளைப் பெற்று பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொள்ளவும்.

அருட் திரு. E. N. லோறன்ஸ்,
குரு இல்லம்,
தென்னிந்திய திருச்சபை,
சாவகச்சேரி.

மேலும் புதிதாக வகுப்புக்களில் சேர விரும்புவோர் அனுமதிப் பத்திரங்களையும், விவரங்களையும் அவ்விடத்திலேயே பெற்றுக்கொள்ளவும்.

செயற்திட்டப் பணிப்பாளர்,
தென்னிந்திய திருச்சபை.

ஆதீனக் காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

(சி-10276)



## பொதுக்கூட்டம்

யாழ். பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் சகல பழைய மாணவர்களுக்குமான பொதுக்கூட்டம்.

இடம் : கொ / இந்துக் கல்லூரி
காலம் : 11 - 09 - 94 பி. ப. 4.00 மணி
(ஞாயிறு)

ப. சிறிகரன்
கொக்குவில் இந்து
பழைய மாணவன்.

(9302)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 6ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடந்த முதலாம் திகதி முதல் அவசரகாலச்சட்டம் அமுலில் உள்ளது தெரிந்ததே. இதேவேளை பாராளுமன்ற தெரிவுக் குழுக்களுக்கான உறுப்பினர்களும் இன்று தெரிவு செய்யப்படவுள்ளனர்.

### ஜனாதிபதி

அமைப்பு சரத்தை பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நீக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### குடியிருப்புக்கள்

படையினர் குடியிருப்புகள் மீது மேற்கொண்ட பீரங்கி கலிபர் தாக்குதலின்போது இச்சேதம் ஏற்பட்டது

பருத்தித்துறை வியாபாரி மூலையில் பாலசுப்பிரமணியம் என்பவரது வீட்டின் மேல் விழுந்ததையடுத்து வீட்டின்கூரைப்பகுதி பலத்த சேதமடைந்தது கூரையைதுளைத்துச்கொண்டு உட்சென்ற குண்டினால் அங்கிருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான உடுபுடவைகள் எரிந்து சாம்பரானது.

அங்கிருந்தவர்கள் பீரங்கித் தாக்குதல் கேட்டதையடுத்து பாதுகாப்புக்கருதி மறைந்து கொண்டதால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை. மற்றும் பகுதிகளிலும் பல மரங்களும் முறிந்தன.

மற்றும் நேற்று காலை 2.30 மணிக்கு வல்வெட்டித்துறை பகுதியில் மீனவர்கள்மீதும் பலத்த பீரங்கித் தாக்குதலை கடற்படையினர் மேற்கொண்டனர். (யோ)

### யாழ்

கணித ஆசிரியர்களுக்கு இருபத்தொரு சதவீத பற்றாக்குறையும், ஏனைய ஆசிரியர்களுக்கு நாற்பத்திரண்டு சதவீத பற்றாக்குறையும் நிலவுவதாகவும் இவர் சுட்டிக்காட்டியுள்ளார். [17]

தார்-

வடபகுதியில் ஈசனம், துறைமுகம், நெடுஞ்சலை என்பனவற்றில் அபிவிருத்தி செய்ய அந்நிய உதவி நாடப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### ஆனையிறவு

கள் பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தாண்டிக்குளத்தில உள்ளது போன்று ஆனையிறவு இராணுவ பரிசோதனை நிலையை தாண்டிச் செல்ல வேண்டும் எனவும் சிறிலங்கா வானொலி தெரிவித்தது.

### சந்திரிகா

கடந்த வெள்ளியன்று இ. தொ. கா. உத்தியோகத்தர்கள் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இ. தொ. கா. ஒரு தொழிற் சங்கம், மலையக மக்களின் நலனே எமக்கு முக்கியம். இ. தொ. கா - பொதுஜன ஐக்கிய முன்னணிப் பேச்சுவார்த்தையும் இதனடிப்படையிலேயே நடைபெறுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்துத் தொண்டமான் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக்கட்சியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடு தற்போது செல்லுபடியாகாது என்றும் உறுதியான அரசொன்றை அமைப்பது தொடர்பாகவே இவ் உடன்பாடு இடம்பெற்றது என்றும் மேலும் அவர் கூறினார். முன்னதாக எதிர்க்கட்சித் தலைவர் காமினிதிசாநாயக்கவையும் ஐ. தே க. செயலர் காமினி விஜேசேகரவையும் இவர் சந்தித்துப் பேசியிருந்தார்.

### வட கிழக்கு

மலை மாவட்டத்திலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணி மூலம் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டவருமான தங்கத்துரை நியமிக்கப்படலாம் என கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது. [சி]

வார்த்தைக்கு விடுதலைப் புலிகளிடம் இருந்து உத்தியோகபூர்வமான பதிலை எதிர்பார்த்து இருப்பதாக பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் இவ் அழைப்பை விடுக்க வேண்டும் என்றும் இதன் மூலமே பேச்சுவார்த்தைகளைத் தொடங்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதி டி பி

சிறிலங்காவின் 9-வது பாராளுமன்றத்தின் பிரதமராக முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினால் நியமிக்கப்பட்ட இவர் பின்னர் 1993 மே மாதம் முதலாம் திகதி கொழும்பில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் ஆர். பிரேமதாசா கொல்லப்பட்ட பின்னர் பாராளுமன்றத்தால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு வயது 72.

இதேவேளை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று ஐ. தே. க. கூட்டத்தில் அவர் கலந்து கொள்ளவில்லை. கடந்த தேர்தலின் போது அடைந்த தோல்வி தொடர்பாக ஆராய இக் கூட்டம் நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.


உ

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பவ வருடம் ஆவணித் திங்கள் 22-ம் நாள் (07-09-1994) புதன்கிழமை காலை 8-40 மணிமுதல் 10-40 மணிவரை வரும் துலா லக்கின சுப முகூர்த்த வேளையில்

தவில் மாமேதை N. R. சின்னராசா
அவர்களின் சிரேஷ்ட புத்திரன்
திருநிறைச் செல்வன்
**N. R. S. ரவீந்திரன்**
(தவில் வித்துவான்)
அவர்களுக்கும்

தவில் வித்துவான் S. கிருஸ்ணசாமி
அவர்களின் கனிஷ்ட புத்திரி
திருநிறைச் செல்வி
**கிருஸ்ணவேணி**
அவர்களுக்கும்

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில், கலியாண மண்டபத்தில் திருமணம் நிகழ்த்த திருவருள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்,

திருமதி N. R. S. இராஜேஸ்வரி
(அமரர் தவில் மாமேதை N. R. சின்னராசா
அவர்களின் பாரியார்)
இணுவில் கந்தசாமி கோயிலடி
இணுவில்.

திருமதி S. கிருஸ்ணசாமி
சத்திய காட்டுச் சந்தையடி
சுழிபுரம்.

### இருவீட்டார் அழைப்பு

அவ்வண்ணம் தங்கள் நல்வரவை அன்புடன் நாடும்:

திரு. என் கேதீஸ்வரன் (எஞ்சினியர், புறுணை) மணமகனின் மைத்துனர்
திருமதி என். கேதீஸ்வரன் (புறுணை) மணமகனின் சகோதரி
N. R. S முரளீதரன் (U K) மணமகனின் சகோதரன்
N. R. S நரேந்திரன் (U K.) மணமகனின் சகோதரன்
N. R. S சுதாகரன் இணுவில் மணமகனின் சகோதரன்

(தனிப்பட்ட அழைப்பிதழ் கிடைக்கப்பெறாதவர்களும் இவ் அழைப்பை ஏற்றுக்கொள்ளவும்)

(சி-10277)